442

…VED BY THE TEXT-BOOK COMMITTEE, MADRAS.

கோகலே தமிழ் வாசகம்

18 JUL

மூன்றாம் வாசகம்

EDITED BY
P. T. SREENIVASA IYENGAR.

V. S. VENKATARAMAN & CO,
PUBLISHERS, KUMBAKONAM.

4·12
1574

கோகலே

மூன்றும் வாசகம்

OFFICE OF THE REGISTRAR
16 JUL 1937
MADRAS
4482
474·81186
1620

துரைத்தனத்தார் அங்கீகரித்தது.
4—5—1937 கேஜட்டின் 161-ம் பக்கம் பார்க்க.

பதிப்பாசிரியர் :

பி. தி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்

V. S. வெங்கடராமன் கம்பெனி
பப்ளிஷர்ஸ் : : கும்பகோணம்

[...வு செய்தது] [அணா 4

Reprinted 1937.

THE ROYAL PRINTING WORKS,
MOUNT ROAD : : MADRAS.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
18 JUL 1937
MADRAS

முன்னுரை

சென்னை சர்வகலா சங்கத்தின் இந்திய தேச சரித்திர ஆராய்ச்சியாளராய் விளங்கி, நமது தமிழ் நாட்டில் கல்வித்துறை பலவற்றிலும் ஈடுபட்டு மிகவும் உழைத்துப் பல நூல்கள் இயற்றினவருமாகிய ஸ்ரீமான் **P. T.** ஸ்ரீநிவாஸ ஐயங்கார் அவர்களது மனங்கனிந்த உதவியைக் கொண்டு கோகலே வாசகம் எனப் பெயரிய இப் பாட புத்தகங்கள் தொகுக்கப் பெற்றன.

நம் நாட்டு மக்களுக்கு இன்றியமையாத கல்வி அறிவு, உலக அறிவுகள் இளமை தொட்டே நமது சிறுவர்களுக்குப் புகட்டப் பெறின், இவைகள் இளமனதில் பசுமரத்தாணி போல் நன்கு பதியக்கூடும். இத்துணிவுபற்றி இளையோர்களுக்குக் கல்வி, ஒழுக்கம், தேசாபிமானம் முதலியன உண்டாவதற்கு ஏற்றபடி, சித்திரப்படங்களோடுங் கூடிய இனிய கதைகளும், பழையனவும் புதியனவுமான பாடல்களும், பல விஷயங்களைப்படிப்படியாகவருத்தங்காட்டாது சிறுகச் சிறுகப் போதிக்கும் பாகுபாடு பொருந்திய பாடங்களும், சாதுரியமாகப் பேசுந்திறனை யளிக்கும் சம்பாஷணைகளும், தமிழ் வளமுறுத்தும் சொல்லமைதிகளோடும் கூடிய பொருட்டிறனும், நீதி புகட்டும் பழமொழிகளும், கடின மொழிகளுக்குப் பொருளும், இலக்கணப்பாடங்களும், பயிற்சிகளும், வியாச முறையை விருத்தி செய்வதற்குதவும் வினுக்களும், கதை சொல்லப்

பழக்கும் முறையில் நின்ற கதைகளும் இக் கோகலே வாசகத்தில் இனிமையோடு திகழ்ந்து விளங்குவனவாம். அன்றியும், இதன் கண் பழங்காலத்தவருடைய வரலாறு, நீதி, ஒழுக்கம் முதலியவைகளும், இடைக்காலத்தவர் தற்கா லத்தவர்களது நற்செயலும் நம்மாணவர் மன தில் நன்கு வேரூன்றும் பொருட்டு நடித்துக் காட்டத்தகும் அபிநய மொழிகள், அபிநயப் பாட்டுகள் நிறைந்த நாடகங்களும் விரவியுள் ளன.

இவ்வாசகத்தைப் பதிப்பிக்கப் பல விதத்தி லும் உதவின பெங்களூர் செயிண்டு ஜோஸப் காலேஜ் தலைமைத் தமிழ் ஆசிரியர் ஸ்ரீமான் தொழுவூர் வே. சேங்கல்வராய முதலியார் அவர் களுக்கும், சென்னை வெஸ்லியன் கல்லூரித் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமான் பி.ஆர்.ராஜசூடாமணி அவர்களுக்கும், இதுவரையில் எமது பாடபுத்த கங்களை ஏற்று ஆதரித்துவந்த கல்வி அதிகாரி கள், கல்விச்சாலைத் தலைவர்கள், ஆசிரியர்கள் முதலியவர்களுக்கும் யாம் மிகவும் நன்றி பாராட்டக் கடமைப் பட்டுள்ளோம்.

தமிழ் நாட்டு முன்னேற்றத்தில் ஈடுபட்ட எமது கோகலே வாசகம் என்றும், எங்கும், இனிது பரவும்பொருட்டு எல்லாம் வல்ல இறை வனது அருளை இறைஞ்சி ஏத்துகின்றோம்.

V. S. வேங்கடராமன் கம்பெனி.

பொருளடக்கம்

பாடம்	விஷயம்	பக்கம்
1.	வாழ்த்துப் பாட்டு	7
2.	ஔவையார்	8
3.	ஔவையார் (பாடல்)	10
4.	ஔவையார் உபதேசம் I (ஆத்திசூடி)	11
5.	புத்திமானே பெரியவன்	12
6.	அணில் (சம்பாஷணை)	14
7.	கடிகாரம்	17
8.	தாலாட்டு	21
9.	பஞ்ச பாண்டவர்கள்	23
10.	எனது கிராமம்	26
11.	கிளி	30
12.	பால கிருஷ்ணன் I	33
13.	பால கிருஷ்ணன் II	37
14.	பிராணிகள்	40
15.	மரமும் அதன் முக்கிய உறுப்புக்களும்	43
16.	சோழ நாட்டின் சிறப்பு	45
17.	ஒரு மந்திரியின் தந்திரம்	47
18.	கிராமொபோன்	49
19.	நல்லொழுக்கம்	52
20.	கோபால கிருஷ்ண கோகலே	55
21.	ஔவை உபதேசம் II (ஆத்திசூடி)	58

பாடம்	விஷயம்	பக்கம்
22.	ஸ்ரீராமர் விபீஷணருக்கு அருள் செய்தல் ...	60
23.	தெனலிராமன் ...	62
24.	நிழல் ...	65
25.	உழவர் பாட்டு ...	68
26.	களிமண்ணும் சட்டியும் (சம்பாஷணை)	70
27.	பருவங்கள் ...	73
28.	குரு பக்தி (நாடகம்) ...	76
29.	கடிதம் I ...	80
30.	கடிதம் II ...	82
31.	என் தோட்டம் ...	83
32.	சித்திர இலக்கணம் ...	84
33.	ஔவை உபதேசம் III (கொன்றை வேந்தன்) ...	87

கோகலே

மூன்றும் வாசகம்

---

1. வாழ்த்துப் பாட்டு

"முத்திநெறி" என்ற மெட்டு

1. உலகமெலாம் ஒளிர்வடிவாய்
உயிர்க்குயிராய் நின்றருளும்
அலகில்சீர் உடையபிரான்
அடிமலரைப் போற்றிடுவோம்.

2. பெருமைமிகு தாயோடு
பிதாவையு நற்குருவையு நாம்
அருமையுடைப் பரம்பொருளாய்
அனுதினமும் வணங்கிடுவோம்.

3. தம்முயிர்போல் பிற உயிரைச்
சந்ததமும் காத்தருளும்
நம்முடைய மன்னவரை
நாள்தோறும் வாழ்த்திடுவோம்.

4. செல்வமிகு நம்தெய்வத்
திருநாடாம் பெருநாடும்
பல்வளமும் மிகச் செழிக்கப்
பற்றொடு நாம் போற்றுவமே.

5. வாழ்க மறை, வாழ்க புவி,
வாழிய பாரத தேவி,
வாழ்க பெருந் திருமன்னர்,
வாழ்க தமிழ் மாணவரே.

2. ஔவையார்

1. வெகு காலத்திற்கு முன் ஒரு பாட்டியார் இருந்தார். அவர் பெயர் ஔவையார். அவரைப் பற்றிக் கேள்விப் படாதவர்களும் உண்டோ? ஏறக்குறைய நமது நாட்டுப் பெண்கள் எல்லோரும் ஔவைப் பாட்டியாரைக் குறித்துப் பல கதைகள் சொல்வார்கள். ஔவைப் பாட்டியாரின் கதைகள் கேட்கக் கேட்க வெகு இரசமாய் இருக்கும்.

2. ஔவையார் நன்றாகக் கற்றவர்; அறிவில் சிறந்தவர்; சாதுரியமாகப் பேசுபவர்; நமக்கு அறிவைப் புகட்டும் ஆத்திசூடி கொன்றை வேந்தன் முதலிய பல நீதி நூல்களைத் தமிழில் செய்தவர்; பல அருமையான பாடல்களைப் பாடினவர்.

3. அவர் எல்லோரிடத்திலும் அன்பு உள்ளவர்; எல்லோருக்கும் நன்மையே செய்து கொண்டிருப்பார்; கெட்டவர்களைச் சீர்ப்படுத்துவார்; எப்போதும் இனிமையாகப் பேசுவார். அவர் மிகவும் இரக்கம் உடையவர்.

4. ஒரு நாள் மாலையில் ஔவையார் திருக்கோவலூருக்கு அடுத்த பெண்ணை யாற்றின் கரையோரமாகப் போய்க் கொண்டிருந்தார். அப்பொழுது திடீரென்று மழை பெய்தது. அவர் மழைக்கு எங்கே ஒதுங்கலாம் என்று அங்கும் இங்கும் பார்த்தார். சமீபத்தில் ஒரு குடிசை தென்பட்டது. அவர் மழைக்கு ஒதுங்க அந்தக் குடிசைக்குச் சென்றார். அங்கே இரண்டு பெண்கள் ஒரு துணையும் இல்லாமல் தனிமையாக இருந்தார்கள்.

5. அவர்கள் மழையில் நனைந்து வந்த பாட்டியாரைக் கண்டார்கள்; உடனே அவரை அன்போடு உள்ளே அழைத்து உபசரித்தார்கள். அவருடைய நனைந்த உடம்பை நன்ருய்த் துடைத்தார்கள்.

6. ஔவையார் பசியினுல் மிகவும் களைத்து இளைத்து இருந்தார். அந்தப் பெண்கள் மிகவும் ஏழைகள். ஔவையாரின் பசியைத் தீர்க்க அவர்களிடம் ஒன்றும் இருக்கவில்லை. ஆனுல், கொஞ்சம் கூழ் மட்டும் இருந்தது. அந்தக் கூழைச் சாப்பிடும்படி பாட்டியாரை அன்போடு உபசரித்தார்கள்.

7. ஔவையார் சந்தோஷத்தோடு அதைச் சாப்பிட்டார். பின்பு, அவர்கள் அவரைத் தங்களுடைய படுக்கையில் படுக்க வைத்தார்கள். தங்களது கம்பளியினுல் அவரைப் போர்த்தார்கள். பின்பு, ஔவையார் நன்ருய்த் தூங்கும் வரையில் அவருடைய கால், கைகளை இருவரும் பிடித்துக் கொண்டிருந்தார்கள்.

8. ஔவையார் அவர்களுடைய அன்பைக் கண்டு மிகவும் மகிழ்ந்தார். அவர்கள் தனிமையாய் இருக்கிருர்களே என்று அவர் மிகவும் மனம் இரங்கினுர்; அவர்களுக்கு மணம் செய்து வைக்க நிச்சயித்தார்; சேர சோழ பாண்டிய மன்னர்களைக் கொண்டு அவர்களுக்குச் சிறப்பாக மணம் முடித்து வைத்தார்; அந்த அரசர்களிடமிருந்து சிறந்த வரிசைகள் வாங்கி அவ்விரு பெண்களுக்கும் கொடுத்தார்; அந்தப் பெண்கள் என்றும் சுகமாய் இருக்க அவர்களை வாழ்த்திச் சென்ருர்.

பழமொழிகள் :—(1) அறிவுடை ஒருவனை அரசனும் விரும்பும். (2) உண்டிக்கு அழகு விருந்தோடு உண்டல். (3) ஔவை ஓதியது ஆத்திசூடி.

அர்த்தம் :—சாதுரியம் = சாமர்த்தியம். புகட்டும் = மனத்தில நுழைக்கும். உபசரித்தார்கள் = மரியாதை பண்ணினார்கள். மகிழ்ந்தார் = சந்தோஷித்தார். மணம் = கல்யாணம். உண்டி = சாப்பாடு. ஓதியது = சொல்லியது.

கேள்விகள் :—(1) ஔவையாருடைய குணங்கள் யாவை? (2) ஔவையாருடைய மன இரக்கம் எதனால் விளங்குகிறது? ஏன்? (3) ஔவையார் நமக்குச் செய்த நன்மை யாது? (4) ஔவையார் வரலாற்றால் நீங்கள் அறிந்தது யாது?

கோடிட்ட இடங்களில் தக்க சொற்கள் அமைத்து வாசி :—(1) ஔவையார் — சிறந்தவர். (2) ஔவையார் பல — — பாடினார். (3) கெட்டவர்களைச் — படுத்தினார். (4) அவர்கள் — நினைந்து வந்த பாட்டியாரைக் —.

சித்திரம் :—குடிசை.

---

3. ஔவையார் (பாடல்)

ஔவையின் பாடல்கள் படிப்போம்,
அருமையாய்த் தமிழ்தன்னை வளர்ப்போம்;
ஔவையின் கதையெல்லாம் கேட்போம்,
ஔவையின் சொற்படி நாம் நடப்போம்.
அருந்தமிழை ஆதரித்தாள் ஔவை,
அரும் ஆத்தி சூடியுமே உரைத்தாள்,
நறுந் தமிழ் நல் வழியையும் நவின்றாள்,
நற் கொன்றை வேந்தனையும் இசைத்தாள்.

அருந்தமிழ் மூதுரையையும் அறைந்தாள்,
அருஞ்செய்யுள் மணிபலவும் தந்தாள்,
செந்தமிழும் செழித்திடவே பிறந்தாள்,
தேசமெங்கும் பெருப்புகழே கொண்டாள்.

அர்த்தம் :—அருந்தமிழ்=அருமையான தமிழ். உரைத்தாள்=சொன்னாள். நறும்=நன்மையான. ஆத்திசூடி, நல்வழி, கொன்றைவேந்தன், மூதுரை முதலிய நூல்கள் ஔவையார் பாடினவை. நவின்றாள்=சொன்னாள். அறைந்தாள்=சொன்னாள். செய்யுள்=பாடல். மணி=இரத்தினம்.

---

4. ஔவையார் உபதேசம்—I

ஆத்திசூடி

1. அறஞ்செய விரும்பு.
2. ஆறுவது சினம்.
3. இயல்வது கரவேல்.
4. ஈவது விலக்கேல்.
5. உடையது விளம்பேல்.
6. ஊக்கமது கைவிடேல்.
7. எண்ணெழுத்து இகழேல்.
8. ஏற்பது இகழ்ச்சி.
9. ஐயம் இட்டு உண்.
10. ஒப்புர வொழுகு.
11. ஓதுவது ஒழியேல்.
12. ஔவியம் பேசேல்.

அர்த்தம் :—அறம்=தர்மம். சினம்=கோபம். இயல்வது=கொடுக்கக்கூடியது. கரவேல்=மறைக்காதே. ஈவது=கொடுப்பது. விளம்பேல்=சொல்லாதே. ஊக்கம்=விடா முயற்சி. எண்=கணிதநூல். எழுத்து=இலக்கணநூல். ஏற்பது=பிச்சை எடுப்பது. இகழ்ச்சி=இழிவு. ஐயம்=பிச்சை. ஒப்புரவு=உலக நடை. ஔவியம்=பொறாமையான சொற்கள்.

5. புத்திமானே பெரியவன்

ஒரு கிராமத்தில் குடியானவன் ஒருவன் இருந்தான். அவனுக்கு இரண்டு பிள்ளைகள் இருந்தார்கள். அந்தக் குடியானவனுக்கு வயது அதிகமாகிவிட்டது. அவன், "நான் இனிமேல் வெகு நாள் பிழைத்து இருக்க மாட்டேன்; வெகு சீக்கிரம் இறந்து போவேன். நான் மரிக்கும் முன்னமேயே என் ஆஸ்தியை எல்லாம் என் பிள்ளைகளுக்குள் மிகவும் விவேகம் உள்ளவனுக்கே கொடுக்க வேண்டும்" என்று நினைத்தான்.

ஒரு நாள், குடியானவன், தன் பிள்ளைகள் இருவரையும் தன் அருகில் அழைத்தான். அவன் ஒவ்வொரு பிள்ளைக்கும் ஐந்து பணம் கொடுத்தான். பின்பு, அவர்களைப் பார்த்து, "பிள்ளைகளே! நீங்கள் இந்தப் பணத்தினால் ஏதாவது ஒரு பொருள் வாங்கி, நான் புதிதாகக் கட்டின இரண்டு வீடுகளையும் அதனால் நிரப்புங்கள்" என்றான். பிள்ளைகள் அப்படியே செய்வதாக ஒப்புக்கொண்டு சென்றார்கள்.

மூத்தவன் கடைக்குப் போனான். அங்கே ஒரு கரும்புக் கடைக்குப் பக்கத்தில் குவியல் குவியலாகக் கருப்பஞ் செத்தை கிடந்தது. அவன் அந்தக் கருப்பஞ் செத்தையை ஐந்து பணம் விலை பேசி வாங்கினான்; அதை வண்டிகளில் ஏற்றிக்கொண்டு வந்து தன் வீட்டை நிரப்பினான்.

இளையவன் கடைக்குப்போய் ஐந்து பணத்திற்கும் ஒரு நல்ல விளக்கை வாங்கி வந்தான். அதை ஏற்றி வைத்துத் தன் வீடெங்கும் வெளிச்சம் நிரம்பச் செய்தான்.

தகப்பன் இரவில் இரண்டு பிள்ளைகளுடைய வீடுகளையும் பார்க்கப் போனான். கருப்பஞ் செத்தையினால் நிறைந்து இருந்த வீட்டைக் கண்டு, அந்த மகனுடைய புத்தியீனத்திற்காக மிகவும் துக்கித்தான்; விளக்கு ஏற்றி வைத்த பிள்ளையின் புத்தியைக் கண்டு மிகவும் மகிழ்ந்தான்; தன் சொத்தை எல்லாம் இளையவனுக்கே கொடுத்தான். இக்கதையினால் நாம் "புத்திமானே பெரியவன்" என்று அறிகிறோம்.

அர்த்தம் :— இறந்து=செத்து. மரிக்கும்=இறக்கும். ஆஸ்தி=சொத்து. விவேகம்=புத்தி. ஒப்புக்கொண்டு=சம்மதித்து. புத்தியீனம்=அறிவில்லாமை. துக்கித்தான்=விசனப்பட்டான். மகிழ்ந்தான்=சந்தோஷப்பட்டான்.

கேள்விகள் :—(1) குடியானவன் என்ன நினைத்தான்? (2) குடியானவன் பிள்ளைகளை என்ன செய்யச் சொன்னான்? (3) மூத்தவன் என்ன செய்தான்? (4) இளையவன் என்ன செய்தான்? இரு பிள்ளைகளிலும் அதிக விவேகம் உள்ளவன் எவன்? அது எப்படி? (5) தகப்பன் இளைய பிள்ளைக்கு என்ன கொடுத்தான்?

கோடிட்ட இடங்களில் தக்க சொற்கள் அமைத்து வாசி:—

(1) மூத்தவன் அந்தக் — செத்தையை — வாங்கினான்.
(2) இளையவன் வீடெங்கும் — நிரம்பச் —.
(3) — ஏற்றி வைத்த பிள்ளையின் — கண்டு மிகவும் —.

6. அணில்

கோபாலன் :—அணிலே! அணிலே! சின்னஞ் சிறு அணிலே! சௌக்கியமா?

அணில் :—கோபாலா! சௌக்கியந்தான்.

கோபாலன் :—அணிலே! நீ மரத்தின் மேல் என்ன செய்கிருய்?

அணில் :—நான் ஒரு வாதாங்கொட்டையைக் கடிக்கிறேன்.

கோபாலன் :—நீ எப்போதும் வாதாங் கொட்டைதான் சாப்பிடுவாயோ?

அணில் :—நான் பல விதமான கொட்டைகளையும் பழங்களையும் சாப்பிடுவேன்.

கோபாலன் :—உனக்கு எப்போதும் பழங்களும் கொட்டைகளும் தின்னக் கிடைக்குமா?

அணில் :—கோபாலா! நமது நாட்டில் உள்ள அணில்களுக்கு எப்போதும் கொட்டைகளும் பழங்களும் கிடைக்கும்.

கோபாலன் :—அப்படியானால் எந்த நாட்டு அணில்களுக்கு அவை அகப்படா?

அணில் :—குளிர் தேசத்தில் வாழ்கிற அணில்களுக்கு குளிர் காலத்திலும் மழை காலத்திலும் கொட்டைகளும் பழங்களும் அகப்படா.

கோபாலன் :—அப்படியானால் அந்த அணில்கள் மழை காலத்தில் பட்டினியாய் இருக்குமா?

அணில் :—அவை மழை காலம் வருவதற்குள் வேண்டிய ஆகாரத்தைத் தேடி வைத்துக் கொள்ளும்.

கோபாலன் :—அவற்றிற்கு மழை காலம் வருகிறது என்று எப்படித் தெரியும்?

அணில் :—எப்படியா? சொல்லுகிறேன் கேள். பகலில் வெயில் அதிகமாக அடிக்கும்; சாயங்கால வேளைகளில் மின்னல் மின்னும்; வாடை வீசும்; இவைதாம் மழை காலம் வருவதற்குமுன் தோன்றும் அடையாளங்களாம்.

கோபாலன் :—அப்படியா? தெரிந்து கொண்டேன்; அதிருக்கட்டும். வாதாங் கொட்டை கல்லைப்போல் கடினமாய் இருக்குமே, அதை எப்படிக் கடிக்கிறாய்?

அணில் :—என்னுடைய பற்கள் வெகு கூர்மையானவை; என் முன்கால்கள் இரண்டும் எனக்குக் கைகள்போல் உபயோகப்படுகின்றன.

நான் பழங்களையும் கொட்டைகளையும் முன்கால் களினால் பிடித்துக்கொண்டு பற்களினால் கடித் துக் கொறித்து உண்பேன்.

கோபாலன் :—உனது வால் நீண்டு மயிர் அடர்ந்திருக்கிறதே! அதனால் உனக்கு என்ன உபயோகம்?

அணில் :—நான் ஒரு மரத்திலிருந்து மற் றொரு மரத்திற்குத் தாண்டும்போது அது என்னை மேலே தூக்கி விடும்.

கோபாலன் :—சில சமயங்களில் நீங்கள் இரண்டு மூன்று பேராக மரத்தின்மேல் சுற்றிச் சுற்றி ஓடுகிறீர்களே! அது என்? நீங்கள் கீழே விழமாட்டீர்களா?

அணில் :—அப்படி ஓடுவதுதான் எங்கள் விளையாட்டு. எங்கள் நகங்கள் வெகு கூர்மை யானவை; அவைகளால் மரத்தைப் பிடித்துக் கொண்டு ஓடுவோம்; கீழே விழமாட்டோம்.

கோபாலன் :—கடவுள் உங்களுக்குக் கொடுத்திருக்கிறவை எல்லாம் வேண்டியவை கள்தாம்; ஆனால், முதுகில் இருக்கிற மூன்று அழகிய கோடுகள் எதற்காக?

அணில் :—ஆ! ஆ!! அது உனக்குத் தெரியாதா? அவர் அதை அமைத்த விதத்தைச் சொல்லுகிறேன், கேள்.

நீ இராமர் கதை வாசித்திருக்கிறாய் அல் லவா? அவர் இலங்கைக்குப் போகையில் சமுத் திரத்தில் அணை கட்டினார். அப்பொழுது எங்கள் முன்னோர்களில் ஒருவர் இராமருக்கு உதவியாக

வந்தார். இராமர் சந்தோஷப்பட்டு அவரைத் தம் மடியின்மேல் வைத்துக்கொண்டு "சபாஷ்" என்று தடவிக் கொடுத்தார். அவர் தடவிக் கொடுத்த இடத்தில் மூன்று கோடுகள் உண்டாயின. அது முதற்கொண்டு எங்கள் எல்லோருக்கும் இக்கோடுகள் இருந்து வருகின்றன. இதுவே, அக்கோடுகளின் வரலாறு. நாழிகை ஆகிவிட்டது ; நான் போய் வருகிறேன்.

பழமொழி :—காற்றுள்ள போதே தூற்றிக் கொள்.

கேள்விகள் :—(1) அணிலின் ஆகாரம் என்ன? (2) மழைக்காலம் வருவதற்கு அடையாளம் என்ன? (3) அணில் தன் முன்னங்கால்களையும், பற்களையும், வாலையும் எப்படி உபயோகிக்கின்றது? (4) அணிலின் முதுகின் மேல் உள்ள கோடுகளைப் பற்றி உனக்கு என்ன தெரியும்?

கோடிட்ட இடங்களில் தக்க சொற்கள் அமைத்து வாசி :—(1) பகலில்—அதிகமாக அடிக்கும். (2)—மின்னல் —. (3) முன் — இரண்டும் கைகள் போல எனக்கு — படுகின்றன. (4) என்னுடைய பற்கள் வெகு —. (5) இராமர் — கொடுத்த இடத்தில்——உண்டாயின.

---

7. கடிகாரம்

1. சூரிய உதயம் முதல் சூரிய அஸ்தமனம் வரையில் உள்ள காலம் ஒரு பகல். சூரிய அஸ்தமனம் முதல் சூரிய உதயம் வரையில் உள்ள காலம் ஓர் இரவு. ஒரு பகலும் ஓர் இரவும் சேர்ந்தது ஒரு நாள் அல்லது ஒரு தினம். இந்துக்கள் ஒரு சூரியோதயம் முதல் மறு சூரியோதயம் வரை உள்ள காலத்தையே ஒரு தினமாகக் கணக்கிடுகிறார்கள். மகமதியர்கள்





கணக்குப்படி, ஒரு சூரியாஸ்தமன முதல் மறு அஸ்தமனம் வரையில் உள்ள காலம் ஒரு நாளாகும். ஐரோப்பியர்களின் கணக்குப்படி நாளானது, நடு இரவில் ஆரம்பித்து மறு இரவில் பன்னிரண்டு மணியோடு முடிகிறது.

2. நமது முன்னோர்கள் ஒரு தினத்தை அறுபது நாழிகைகளாகப் பிரித்து, சூரியனையும் நக்ஷத்திரங்களையும் பார்த்துக் காலத்தை அறிந்தார்கள் மேல் நாட்டார், பகலைப் பன்னிரண்டு சம பாகங்களாகவும், இரவைப் பன்னிரண்டு சம பாகங்களாகவும் பிரித்திருக்கிறார்கள். அவ்வாறு பிரித்த ஒரு பாகமே ஒரு மணி நேரமாம். நமது கணக்குப்படி இரண்டரை நாழிகை கொண்டது ஒரு மணி நேரமாகும்.

3. மேனுட்டார் ஒரு மணி நேரத்தை அறுபது நிமிஷங்களாகப் பிரித்திருக்கின்றனர். அப்படியேஒரு நிமிஷத்தையும் அறுபது பாகமாகப் பிரித்து, அவற்றை விநாடிகள் என்கின்றனர்.

ஒரு விநாடி என்பது "டிக் டிக்" என்பதற்குள்ள நேரமேயாம்.

4. நாம் இக்காலத்தில் நேரத்தைக் கடிகாரங்களால் அறிகிறோம். கடிகாரங்களின் உருவங்களும், வகைகளும் பலவாருய் இருக்கின்றன. ஆனால், கடிகார முகப்பிலுள்ள எண்களும், முட்களும் அமைப்பு முறையில் ஒரே மாதிரியாய் இருக்கின்றன. கடிகார முக வட்டத்தைக் கவனி. அதன் ஓரம் பன்னிரண்டு பெரும் பாகங்களாகப் பிரிக்கப்பட்டு இருக்கின்றது. நாம் அவற்றைப் பன்னிரண்டு எண்களால் அறிகிறோம். ஒவ்வொரு பெரும்பாகமும் சிறு கோடுகளால் ஐந்து சிறு பாகங்களாகப் பிரித்திருக்கிறது. பெரும் பாகங்களிலுள்ள சிறு கோடுகளை வரிசையாக எண்ணிப் பார். அறுபது சிறு கோடுகளிருக்கின்றன அல்லவா? ஒவ்வொரு சிறு கோடும் நிமிஷத்தைக் குறிக்கின்றது. சில கடிகாரங்களின் முகவட்டத்தில் வேருெரு சிறு வட்டம் இருக்கும். அது விஞடி வட்டமாம். அதிலும் அறுபது சிறு கோடுகள் காணப்படும். அச்சிறு வட்டத்தின் ஒவ்வொரு சிறு கோடும் விஞடியைக் காட்டுகின்றது.

5. கடிகார வட்டத்தில் பெரிய முள் ஒன்றும், சிறிய முள் ஒன்றும் சுற்றி வருகின்றன. பெரிய முள் நிமிஷ முள் என்றும், சிறிய முள் மணி முள் என்றும் பெயர் பெறும். விஞடி வட்டத்தில் சுற்றும் முள் விஞடி முள் எனப்படும். ஒரு விஞடியில் இந்த முள் ஒரு கோட்டைத் தாண்டி மறு கோட்டுக்குச் செல்லும். அப்

படியே, அறுபது விநாடியில் அது சிறு வட்டத்தை ஒரு முறை சுற்றும். அப்போது நிமிஷ முள் பெருவட்டத்தில் ஒரு சிறு பாகத்தைத் தாண்டும். அதுவே ஒரு நிமிஷ நேரமாம். அப்படியே நிமிஷமுள் பெருவட்டத்தை ஒரு முறை சுற்றும்போது ஒரு மணி நேரமாகும். மணி முள் கடிகார வட்டத்தை ஒரு முறை சுற்றும்போது பன்னிரண்டு மணி நேரமாகும்; இரு முறை சுற்றினுல் ஒரு நாள் ஆகும்.

6. மணி முள் இருக்கும் இலக்கத்தைப் பார்த்து மணியையும், நிமிஷமுள் இருக்கும் கோட்டைக்கணக்கிட்டு நிமிஷத்தையும் சொல்லலாம். இவ்வாறே, விநாடியையும் அறியலாம். இப்படி நாம் வெகு எளிதில் காலத்தைத் தெரிந்து கொள்ளுகிறோம்.

7. கடிகை என்பதற்கு நாழிகை அல்லது காலம் என்பது பொருள். கடிகாரம் என்பதற்கு நாழிகையை அளந்து காட்டும் கருவி எனப் பொருள். கருவி என்றுல் யந்திரம் என்று அர்த்தம்.

பழமொழிகள்:—(1) போன காலம் திரும்புமா? (2) காலப் போக்கே காரியப் போக்கு.

அர்த்தம்:—உதயம்=வெளித் தோன்றுதல். அஸ்தமனம்=மறைதல். மேனுட்டார்=மேற்கிலுள்ள தேசத்தார்; ஐரோப்பியர் முதலானவர். உருவம்=வடிவம். முகப்பு=முன் பக்கம். முறை=தரம், தடவை. இலக்கம்=எண். எளிது=சுலபம்.

கேள்விகள்:—(1) ஒரு நாள், ஒரு பகல் இவைகளுக்கு மணி எத்தனை? நாழிகை எத்தனை? (2) எத்தனை நிமிஷங்கள் கொண்டது ஒரு மணி? (3) கடிகார முகப்பு எத்தனை பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது? ஏன்?

அவை யாவை? (4) நிமிஷ முள்ளுக்கும் மணி முள்ளுக்கும் உள்ள வித்தியாசம் என்ன? (5) முகப்பிலுள்ள சிறு வட்டத்திற்கு என்ன பெயர்? (6) ஒரு நாளில் மணி முள் கடிகார முகப்பை எத்தனை தரம் சுற்றும்? (7) கடிகாரம் என்று ஏன் பெயர் வந்தது?

கீழ்வரும் சொற்களில் ஒவ்வொன்றையும் சிறு சிறு வாக்கியத்தில் அமைத்து வாசி:—(1) "டிக் டிக்" (2) பல வாறுக (3) நீண்ட முள் (4) மணி முள் (5) வினாடி முள் (6) கணக்கிட்டு (7) கடிகை (8) கருவி.

சித்திரம்:—கடிகாரம்.



8. தாலாட்டு

1. ஆராரோ ஆராரோ!
ஆரிரார் ஆரிரரோ!
சீராரும் எங்கள்குலச்
சிகாமணியே ஆராரோ!

2. கண்ணே ! கரும்பே !
கற்பகமே ! முக்கனியே !
உண்ணத் தெவிட்டாத
உயர்தேனே ! கண்வளராய்.

3. கொட்டிவைத்த முத்தே !
கோதில்லா ரத்தினமே !
கட்டிப்பசும் பொன்னே ! என்
கண்மணியே ! கண்ணுறங்கு.

4. கண்ணுறங்கு ! கண்ணுறங்கு !
காசினியின் மன்னவனே !
வண்ணச்சிறு தொட்டிலிலே
வள்ளலே கண்வளராய் !

5. மாற்றறியாப் பசும்பொன்னே !
மாணிக்கமே மணிவிளக்கே !
ஏற்றநல்ல புது மலரே !
என்னரசே கண்வளராய்.

6. அழுத கண்ணில் நீர் தளும்ப
யாரடித்து நீ அழுதாய்?
அடித்தாரைச் சொல்லிடுவாய்.
அடித்தவர்க்கு விலங்கிடுவேன்.

7. பொன்னால் எழுத்தாணி
பட்டோலை புத்தகமும்
சின்னண்ணு கொண்டுவந்தார்
சிறுபொழுது கண்வளராய்.

8. உன் அப்பா மனமகிழ
உன் அம்மா உளம் குளிர
மண்ணுலகில் வந்தவனே
மன்னவனே ! கண்வளராய்.

9. பஞ்ச பாண்டவர்கள்

1. வெகு காலத்திற்கு முன் வட இந்தியாவில் ஹஸ்தினபுரம் என்ற ஒரு நகரம் இருந்தது. அதைத் திருதராஷ்டிர மகாராஜா ஆண்டு வந்தார். அவருக்கு நூறு பிள்ளைகள் இருந்தார்கள். அவர்கள் எல்லோரும் கெட்ட குணம் உடையவர்கள். அவர்களுக்குக் கௌரவர்கள் என்று பெயர். அவர்களில் துரியோதனன் மூத்தவன். அவன் மிகவும் பிடிவாத குணம் உள்ளவன்; மகா மூர்க்கன்; பெரியோர் சொல்லை மீறி நடப்பவன்; பேராசைக்காரன் பொறாமையும், சூதும், குறும்பும் உடையவன்

2. திருதராஷ்டிர மகாராஜாவிற்குப் பாண்டு என்ற ஒரு தம்பி இருந்தார். பாண்டுவுக்கு மிகவும் யோக்கியர்களும், பராக்கிரமசாலிகளுமான ஐந்து பிள்ளைகள் இருந்தார்கள். அவர்களில் தருமபுத்திரர் மூத்தவர். அவர் பெரியோர்களிடத்தில் பயமும் பக்தியும் உள்ளவர்; அடக்கம் அன்பு, பொறுமை, கீழ்ப்படிதல் முதலிய நற்குணங்கள் வாய்ந்தவர். அவருடைய தம்பிகளாகிய பீமன், அர்ச்சுனன், நகுலன், சகாதேவன் என்ற நால்வரும்



அவருக்கு அடங்கி அவர் கட்டளைப்படி நடந்து வந்தார்கள். அவர்கள் ஐவருக்கும் பாண்டவர்கள் என்று பெயர்.

3. பாண்டு மகாராஜா இறந்த பின்பு, பாண்டவர்களைத் திருதராஷ்டிர மகாராஜா வளர்த்து வந்தார். அவர் கிழவரான காலத்தில் தருமருக்கும் தம் பிள்ளையாகிய துரியோதனனுக்கும் இராஜ்ஜியத்தைச் சம பாகமாகப் பிரித்துக்கொடுத்தார். கொஞ்சகாலத்தில் பாண்டவர்கள் தங்கள் திறமையால் இராஜ்ஜியத்தைப் பெரிதாக்கிக் கொண்டார்கள்.

4. இதைக்கண்ட துரியோதனன், பாண்டவர்கள் மீது பொறுமை கொண்டு பகைமை காட்டி வந்தான். ஒரு நாள் அவன் சூதாகத் தருமபுத்திரரைச் சொக்கட்டான் ஆட அழைத்தான். ஆட்டத்தில் தருமபுத்திரர் தோல்வி அடைந்தார்; தம் இராஜ்ஜியத்தையும், செல்வத்தையும் பந்தயமாகவைத்து இழந்தார். துரியோதனன் அவைகளைக் கவர்ந்து கொண்டான்.

5. அப்போது பெரியோர்கள் கூடி, பாண்டவர்கள் பன்னிரண்டு வருஷம் காட்டிலும், ஒரு வருஷம் மறைவாக நாட்டிலும் வாசம் செய்ய வேண்டும் என்றும், பின்பு துரியோதனன் பாண்டவர்களுடைய நாட்டைத் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்றும் ஏற்பாடு செய்தார்கள். அப்படியே, பாண்டவர்கள் பன்னிரண்டு வருஷம்வனவாசம் செய்த பின்பு, ஒரு வருஷம் நாட்டிலும், மறைந்து வாசம் செய்து திரும்பி வந்தார்கள். ஆனால் துரியோதனன் பேராசையால் அவர்கள் நாட்டைத் திருப்பிக் கொடுக்கவில்லை. பெரியோர்கள் என்ன சொல்லியும் அவன் கேட்கவில்லை.

6. அதனால், பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் பெரும் போர் உண்டாயிற்று. அந்த யுத்தம் பதினெட்டு நாட்கள் நடந்தது. அதற்குப் பாரத யுத்தம் என்று பெயர். அதில் கௌரவர்கள் மாண்டார்கள். பாண்டவர்கள் ஜயித்தார்கள். பின்பு தருமர் மகாராஜாவாகத் தமது தம்பிகளுடன் இராஜ்ஜியத்தை நீதியாக அரசாண்டு வந்தார்.

பழமொழிகள் :—(1) கெடுவான் கேடு நினைப்பான். (2) பேராசை பெரு நஷ்டம்.

அர்த்தம் :—மூர்க்கன் = கோபக்காரன். குறும்பு = துஷ்டத்தனம். பராக்கிரமசாலிகள் = பலமுள்ளவர்கள். பகைமை=விரோதம். கவர்ந்து=பறித்து. போர்=யுத்தம் ; சண்டை. மாண்டார்கள்=இறந்தார்கள்.

கேள்விகள்:—(1) ஹஸ்தினாபுரி எங்கே இருக்கிறது? (2) துரியோதனன் யார்? அவன் குணம் என்ன? (3) பஞ்ச பாண்டவர்களின் பெயர்களையும், குணங்களையும் சொல். (4) துரியோதனன் பாண்டவர்களின் மீது பொறாமை கொண்டதும், பாண்டவர்கள் நாட்டை இழந்ததும் ஏன்? (5) பாரத யுத்தம் ஏன் நடந்தது? அதன் முடிவு என்ன?

கோடிட்ட இடங்களில் தக்க சொற்கள் அமைத்து வாசி:—(1) துரியோதனன் திருதராஷ்டிர மகாராஜாவின் — குமாரன். (2) பாண்டவர்கள் பெரியோர்களிடத்தில்— — உள்ளவர்கள். (3) பாண்டவர்கள் பன்னிரண்டு வருஷம் — ஒரு வருஷம் — மறைந்து—செய்தார்கள். (4) தருமர் — தமது தம்பிகளுடன் —- அரசாண்டு வந்தார்.

———



10. எனது கிராமம்

1. என் கிராமத்தின் பெயர் தொழுவூர். அது செங்கற்பட்டு ஜில்லாவிலுள்ள திருவள்ளூர் தாலூக்காவில் இருக்கிறது. இருப்புப் பாதை ஸ்டேஷனாகிய செவ்வாய்ப்பேட்டைக்கு வடக்கில் ஒரு மைல் தூரத்தில் அது உள்ளது.

2. தொழுவூர் கிழக்கு மேற்கில் அதிகமாய் நீண்டு, சதுரமாய் அமைந்திருக்கிறது. அதில், சுற்றிலும், நான்கு வீதிகளும், நடுவில் தெற்கு வடக்காக ஒரு தெருவும், கிழக்கு மேற்காக ஒரு தெருவும் உண்டு. தெருக்கள் எல்லாம் அகலமாய் இருக்கின்றன. அத்தெருக்களிலுள்ள அநேக வீடுகள், ஓடு மூடிய செங்கல்

கட்டடங்களேயாம். அங்கு சில மாடி வீடுகளும் உள.

3. கிழக்கு வீதியில் வேளாளரும், தெற்கு வீதியில் செட்டிமார், வியாபாரிகள், பாளையக்காரர் முதலியவர்களும், மேல் வீதியில் தச்சர், தட்டார், கருமார், வாணியர் முதலிய முக்கியமான கிராமத் தொழிலாளிகளும் வாழ்கிறார்கள். வடக்கு வீதியில் ஒரு கிராமப் பள்ளிக்கூடமும், ஒரு அன்ன சத்திரமும், கடைகளும், ஈசுவரன் கோவிலும், பிடாரி கோவிலும் இருக்கின்றன. தெற்கு வீதியின் நடுவில் கிராம முனிசீப் சாவடியும், மேற்குக் கோடியில் தபாலாபீசும் இருக்கின்றன.

4. கிராமத்தின் நடுவில் உள்ள தெற்கு வடக்குத் தெருவில் கிராமக் கணக்கர், கிராம முனிசீப் முதலிய கிராம அதிகாரிகள் வசிக்கிறார்கள். அந்த வீதியின் மத்தியில் பிள்ளையார் கோயில் இருக்கிறது. கோயிலின் இடது பக்கத்திலிருந்துதான் கிழக்கு மேற்குத் தெரு போகிறது. அதுதான் பிராமணர் வீதி. அதற்கு அக்கிரகாரம் என்று பெயர். அதன் மேற்குக் கோடியில் பெருமாள் கோயில் இருக்கிறது.

5. ஊருக்குத் தென் கிழக்கு மூலையில் கிராம தேவதையின் கோயிலும், அம்பட்டன், வண்ணான், தலையாரி முதலிய கிராம ஊழியக்காரர்களின் வீடுகளும் இருக்கின்றன. ஊருக்குக்

கிழக்கே ஆடு மாடுகள் தங்கும் மந்தைவெளியும், ஆதிதிராவிடர்கள் குடியிருக்கிற ஒரு பெரிய சேரியும் இருக்கின்றன. சேரியில் ஏறக்குறைய எல்லா வீடுகளும் குடிசைகளேயாம். என்றாலும், அவர்களில் அநேகர் சொந்த நிலங்களும், ஆடு மாடுகளும் உடையவர்கள். அங்கே சேரியிலுள்ள பிள்ளைகளுக்கென்று தனியாக ஒரு பள்ளிக்கூடம் இருக்கிறது. ஊருக்குத் தெற்கே ஒரு சந்தைத் தோப்பு இருக்கிறது. அந்த இடத்தில் புதன்கிழமை தோறும் வாரச் சந்தை கூடும்.

6. ஊரைச் சுற்றிலும் நன்செய் புன்செய் நிலங்களும், தென்னை, மா முதலிய மரங்கள் நிறைந்த தோப்புகளும் உள. நிலங்களிலும் தோப்புகளிலும் அங்கங்கே பெரிய கிணறுகளும், சிறிய குளங்களும் இருக்கின்றன.

7. ஊருக்கு மேற்கில் ஒரு பெரிய ஏரி உண்டு. கோடை காலத்தில் அதிலிருந்து வயல்களுக்கு ஜலம் பாய்ச்சிச் சாகுபடி செய்வார்கள். வடக்கே ஒரு குளமும், ஆற்றுக் கால்வாயும் இருக்கின்றன. இவைகள் யாவும் நிலங்களுக்கு முக்கிய ஜல ஆதாரங்கள் ஆகும்.

8. தொழுவூர் நீர்வளம், நிலவளம், குடிவளம் உடையது. அங்கே, சுமார் ஆயிரம் ஜனங்கள் வசிக்கிறார்கள். சிறு கிராமமென்று நான் அதை இழிவாகக் கருதமாட்டேன். நான்

பிறந்த ஊர் என்று அதை மிகவும் பெருமையாகப் பாராட்டுவேன். நான் பெரியவனுன பின்பு, என் கிராமத்துக்கும், என் ஊராருக்கும் நன்மை செய்வேன்.

பழமொழிகள் :—(1) ஊருடன் கூடி வாழ். (2) ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்.

அர்த்தம் :—தொழிலாளி=வேலைக்காரன். சாவடி=பொது இடம். நன்செய்=நெல் விளையும் சேற்று நிலம். புன்செய்=இதர தானியம் விளையும் புழுதி நிலம். ஜல ஆதாரம்=நீர் வசதி. வளம்=செழுமை. இழிவாக கேவலமாக. கருதமாட்டேன்=எண்ணமாட்டேன்.

கேள்விகள் :—(1) படத்தைப் பார்த்துத் தொழுவூரின் அமைப்பைப் பற்றிச் சொல். (2) பிராமணர்கள் வசிக்கும் தெருவுக்குப் பெயர் என்ன? (3) கிராமத்தின் முக்கியத் தொழிலாளிகளும், அதிகாரிகளும், ஊழியக்காரர்களும் யார்? (4) ஆடுமாடுகள் தங்கும் இடத்திற்குப் பெயர் என்ன? (5) சந்தைத் தோப்பு என்பது யாது? (6) கிராமத்தின் முக்கிய ஜல ஆதாரங்கள் யாவை? (7) நீ பெரியவனுன பின்பு உன் ஊருக்கும், உறவினருக்கும் என்ன நன்மைகள் செய்ய உத்தேசித்திருக்கிறுய்?

கீழ்வரும் சொற்களில் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்துச் சொல் :—(1) தொழுவூர் (2) தொழிலாளிகள் (3) அக்கிரகாரம் (4) மந்தை வெளி (5) சேரி (6) சந்தை (7) பாய்ச்சுவார்கள் (8) இழிவாக (9) நன்செய்.

சித்திரம் :—வண்டி ; கைகாட்டி மரம்.

—

11. கிளி

1. நான் ஒரு கிளி. நான் பிறந்தபொழுது ஒரு சிறு முட்டையாக இருந்தேன்; பின்பு, அது வெடித்துச் சிறு குஞ்சாக வெளி வந்தேன். அப்பொழுது எனக்குச் சிறகுகள் வளரவில்லை. என் தாய் எனக்குப் பால் கொடுக்கவில்லை. ஆனால், அவள் அன்புடன் இரை தேடி வந்து என் வாயில் ஊட்டினாள். இப்பொழுது சிறகுகள் வளர்ந்து, நான் பச்சை நிறத்துடன் வெகு அழகாய் இருக்கிறேன் பார்!



2. எனது தேகம் வெகு இலேசானது. என் இறக்கைகளின் உதவியால் நான் நன்ருகப் பறப்பேன்; ஆனால், அதிக உயரம் செல்லமாட்டேன். எனது கால்கள் ஒவ்வொன்றிலும் நான்கு விரல்கள் உள. இரண்டு விரல்கள் முன்னாகவும், இரண்டு விரல்கள்

பின்னுகவும் வளைந்திருப்பதால் நான் கிளை களை உறுதியாகப் பிடித்துக் கொள்ளுவேன். தூங்கினுலும், காற்றடித்தாலும் நான் கீழே விழமாட்டேன். எனக்குப் பற்கள் இல்லை. என் மூக்கு செக்கச் செவேலென்று இருக்கிறது. அது வளைந்து கூர்மையாகவும், வலிமையாக வும் இருக்கிறது. ஆகையால், பழங்களையும் கொட்டைகளையும் கடித்து உடைத்துத் தின்ன அது எனக்கு மிகவும் சாதகமாய் இருக்கிறது. எனது நாசித் துவாரங்களும், காதுகளும் உள்ள இடங்களைக் கவனித்துப் பார்.

3. நான் மிகவும் இனிமையாகக் கொஞ்சு வேன். எனக்குப் பேசக் கற்றுக்கொடுக்கிற வார்த் தைகளை அப்படியே சொல்லுவேன். என் பேச் சினுல் எல்லோரையும் மகிழ்விப்பேன். என் பேச்சைக் கேட்க நீங்கள் விரும்புவீர்கள்.

4. நான் பழங்களையும் பால் கலந்த சோற் றையும் தின்பேன். கோவைப் பழத்தின்மேல் எனக்கு வெகு பிரியம். சில காய்களையும், தானி யங்களையும் நான் உண்பேன்.

5. எனக்குப் பூனையைக் கண்டால் பயம் அதிகம். அது என்னைப் பிடித்துக் கொன்று விடும். என்னை வளர்க்க விரும்புவோர்கள் என்னைக் கூட்டிற்குள் வைத்துப் பாதுகாக்க வேண்டும். ஆனுல், என் இனத்தாரோடு மரங் களில் வசிப்பதே எனக்கு ஆசை. உன்னை விளை யாட விடாமல் ஓர் அறையில் அடைத்து வைத் தால் நீ எவ்வளவு வருத்தப்படுவாய்? நான் என்னைத் தொந்தரவு செய்கிறவர்களை மூக்கினுல் கொத்துவேன்.

6. என் இனத்தில் சில வெண்மையாகவும் சில பஞ்ச வர்ணமாகவும் இருக்கும். வெள்ளைக் கிளியையும், பஞ்சவர்ணக் கிளியையும் நீ பார்த்திருக்கிருயா? அவைகளைக் காண்பது அரிது.

7. சில கிளிகளுக்குக் கழுத்தில் நீலக்கோடு இருக்கும். அவை ஆண் கிளிகள். எனக்குக் கழுத்தில் கோடு இல்லை. என்னைப்போலக் கழுத்தில் கோடு இல்லாதவை பெண் கிளிகள்.

பழமொழிகள் :—(1) சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை. (2) இலவு காத்த கிளியாய் ஏமாருதே.

அர்த்தம் :—இரை=உணவு, ஆகாரம். இலேசானது=கனமில்லாதது. வலிமை=பலம். சாதகமாக=உபயோகமாக. பஞ்சவர்ணம்=ஐந்து நிறம். இனம்=சாதி. நாசி=மூக்கு. மகிழ்விப்பேன்=சந்தோஷிக்கச் செய்வேன்.

கேள்விகள் :—(1) கிளி பிறந்ததிலிருந்து பறக்கும் வரையில் அடையும் உருவ வேறுபாடுகளை விவரித்துச் சொல். (2) கிளியின் அங்க அவயவங்களின் அமைப்புக்களையும், அவற்ருல் கிளிக்குள்ள உபயோகங்களையும் சொல். (3) கிளியின் உணவையும் அதை எவ்வாறு வளர்க்கவேண்டும் என்பதையும் சொல். (4) கிளிகளில் எத்தனை வகை உண்டு? (5) நீ சாதாரணமாகப் பார்க்கிற கிளிகள் எப்படிப்பட்டவை? (6) ஆண் கிளிக்கும் பெண் கிளிக்கும் உள்ள வேறுபாடு என்ன?

கோடிட்ட இடங்களில் தக்க சொற்கள் அமைத்து வாசி:—(1) என்—எனக்கு—கொடுக்கவில்லை. (2) என் மூக்கு வளைந்து— —இருக்கும். (2) எனக்கு—கண்டால் பயம் அதிகம். (3) என் இனத்தில் சில—சில——இருக்கும். (5) சில கிளிகளுக்குக்—நீலக்கோடு இருக்கும். அவைகள்—கிளிகள்.

சித்திரம் :—கிளி.

---

12. பாலகிருஷ்ணன்—I

1. முன்னொரு காலத்தில் வட மதுரையில் கம்ஸன் என்ற ஓர் அரசன் இருந்தான். அவன் மிகவும் கொடியவன்; குடிகளை அதிகமாகத் துன்பப் படுத்துகிறவன். அவனுக்குத் தேவகி என்ற ஒரு தங்கை இருந்தாள். அவள் கணவன் பெயர் வசுதேவர். அவர்களுக்கு ஏழு குழந்தைகள் பிறந்தன. அவைகளை எல்லாம் கம்ஸன் கொன்றுவிட்டான். அவனைத் தண்டிப்பதற்காகக் கடவுள் மனித ரூபமாய்த் தேவகியின் வயிற்றில் எட்டாவது குழந்தையாகப் பிறந்தார். அந்தக் குழந்தையின் பெயர் கிருஷ்ணன்.

2. அந்தக் குழந்தையையும் கம்ஸன் கொன்று விடுவான் என்று வசுதேவர் பயந்தார். ஆகையால், அவர் பால கிருஷ்ணனை ஒருவருக்கும் தெரியாமல் ஆயர்பாடிக்கு எடுத்துச் சென்றார். ஆயர்பாடி வட மதுரையை அடுத்த ஓர் ஊர். அந்த ஊரார் எல்லோரும் இடையர்கள். அவர்களுக்கு நந்தகோபர் என்பவர் தலைவர். நந்தகோபருடைய மனைவியின் பெயர் யசோதை. வசுதேவர் கிருஷ்ணனை யசோதையின் வீட்டில் ஒளித்து வைத்திருந்தார். ஆனால், வசுதேவர் செய்த காரியம் கம்ஸனுக்குத் தெரிந்துவிட்டது. அவன் குழந்தையைக் கொல்ல வழி தேடினான்.

3. இந்தப் படத்தைப் பார்! தொட்டிலில் ஒரு குழந்தை விளையாடுகிறது. அது யார் தெரியுமா? அது தான் கிருஷ்ணன். கம்ஸன் ஒரு நாள் கிருஷ்ணனைக் கொல்ல ஓர் அசுரனை அனுப்பினான். அவன் ஒரு வண்டி வடிவமாகக் கிருஷ்ணன் படுத்திருக்கும் தொட்டிலின் அருகே வந்தான். அவன் வருகிறான் என்று கிருஷ்ணனுக்குத் தெரிந்து விட்டது. படத்தைப் பார்! குழந்தை தன் காலால் வண்டியை உதைத்து உடைத்து விட்டது. அதோடு அசுரனும் மாய்ந்தான்.



4. யசோதைக்குக் கிருஷ்ணனுடைய துஷ்டத் தனத்தைப் பொறுக்க முடியவில்லை. ஒரு நாள், அவள் அவனைப் பிடித்து ஓர் உரலில் கட்டினாள். கிருஷ்ணன் அந்த உரலை வெளியே இழுத்துக்



கொண்டு வருவதைப் பார்! வருகிற வழியில் இரண்டு மருத மரங்கள் இருந்தன. கிருஷ்ணன் அந்த உரலை இழுத்துக் கொண்டு மரங்களின் நடுவிலே நுழைந்து சென்றான். உரல் மரங்களின் மத்தியிலே மாட்டிக்கொண்டது. அப்போது அவன் பலமாக உரலை இழுத்தான். உடனே அம்மரங்கள் முறிந்து கீழே விழுந்து விட்டன.

5. யசோதை கிருஷ்ணனைச் சாதாரணமான ஒரு குழந்தை என்றே நினைத்திருந்தாள். அவன் கடவுளின் அவதாரம் என்றும், அவன் மகிமை இன்னதென்றும் அவளுக்குத் தெரியாது.

6. ஒரு நாள் குழந்தை வீதியில் மண்ணைத் தின்று விட்டது. யசோதை குழந்தையைக் கோபித்து வாயைத் திறக்கும்படி சொன்னாள். இதோ பார்! யசோதை குழந்தையின் வாய்க்குள் எதையோ பார்த்து, அதிசயித்துப் பயந்து இருக்கிறாள். ஏனென்றால், கிருஷ்ணன் வாயைத் திறந்தவுடன், யசோதை அதனுள் உலகம் முழுவதையும் கண்டாள். அவளுக்கு மயக்கம் உண்டாயிற்று. ஆனால், கிருஷ்ணன் அவள் மயக்கத்தை உடனே தீர்த்து விட்டான்.



7. கிருஷ்ணன் இங்கே ஓர் இடைச்சி வீட்டில் நுழைந்து உறியிலிருக்கும் வெண்ணெயை எடுக்கிறான், பார்! கீழே பால் குடத்தை உருட்டி விட்டான்; ஒரு சட்டியைக் கவிழ்த்து அதன் மேல் நின்றுகொண்டிருக்கிறான். அயலார் வீட்டில் நுழைந்து பால், தயிர், வெண்ணெய் இவைகளை எடுத்துத் தின்ன அவனுக்கு வெகு ஆசை. அது அவனுக்கு ஒரு விளையாட்டு.

அர்த்தம் :—கொடியவன் = பொல்லாதவன். குடிகள் = ஊர் ஜனங்கள். ரூபம் = உருவம்; வடிவம். மாய்ந்தான் = இறந்தான். அவதாரம் = பிறப்பு. மகிமை = பெருமை. அயலார் = பிறர்.

கேள்விகள் :—(1) கம்ஸன், கிருஷ்ணன்—இவர்கள் யார்? (2) கிருஷ்ணன் எங்கே வளர்ந்தான்? ஏன்? (3) கிருஷ்ணன் வண்டியை ஏன் உடைத்தான்? (4) மருத மரங்கள் ஏன் முறிந்தன? (5) யசோதை கண்ட அதிசயம் யாது? (6) இடைச்சேரியில் கிருஷ்ணன் செய்த விளையாட்டு யாது?

கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்து வாசி :—(1) வடமதுரையைக்— ஆண்டான். (2) கம்ஸன்—கொல்ல—தேடினான். (3) அசுரன்—வடிவமாக வந்தான். (4) யசோதை—பிடித்து—கட்டினாள். (5) கிருஷ்ணனுடைய—யசோதை முழு—கண்டாள். (6) கிருஷ்ணன்—இருக்கும்—எடுக்கிறான்.

சித்திரம் :—உரல்; சக்கரம்.

13. பாலகிருஷ்ணன்—II

1. கம்ஸன் கிருஷ்ணனை எப்படியாவது கொன்றுவிடவேண்டும் என்று தீர்மானித்தான். அவன் கிருஷ்ணனைக்கொல்லப்பல அசுரர்களை அனுப்பினான். கிருஷ்ணன் அவர்கள் எல்லோரையும் கொன்றுவிட்டான்.

2. இதோ பார்! கிருஷ்ணன் விளையாட்டாக ஒரு கன்றின் வாலைப் பிடித்துத் தூக்கி அதைச் சுழற்றுகிறான். இந்தக் கன்றும் ஓர் அசுரனேயாம். இவனையும் கம்ஸனே அனுப்பினான். கிருஷ்ணன், கன்றைப்போல உருமாறி வந்த அசுரனைத் தூக்கி ஒரு விளாமரத்தில் மோதிக் கொன்றான்.

3. இந்தப்படத்தில் கிருஷ்ணன் ஒருபாம்பின் தலையை மிதித்து அதன் வாலைப் பிடித்துக் கொண்டு நிற்கிறான். அவன் ஏன் அப்படிச் செய்கிறான் தெரியுமா? அந்தப் பாம்பு யமுனை ஆற்றில் ஒரு மடுவில் வெகு காலமாய் வாழ்ந்து வந்தது. அது அநேக பிராணிகளைக் கொன்று கொண்டிருந்தது. ஒரு நாள் கிருஷ்ணன் விளையாட்டாக யமுனை நதிக்கு வந்தான்; அங்கே,

அந்தப் பாம்பு இருந்த மடுவில் குதித்தான்.

உடனே அந்தப் பாம்பின் வாலைப் பிடித்தான்; பின்பு தன் காலால் அதன் தலையை மிதித்துக் கொண்டு கூத்தாட ஆரம்பித்தான். பாம்பு நோவைப் பொறுக்க மாட்டாமல் களைப்பு அடைந்தது. முடிவில், கிருஷ்ணன் அதை அந்த மடுவிலிருந்து வேறொரு இடத்திற்கு ஓட்டி விட்டான்.

4. கிருஷ்ணன் சிறு பையனாக வளர்ந்ததும், ஒவ்வொரு நாளும் அவன் மாடுகளைக் காட்டிற்கு ஓட்டிக் கொண்டுபோவான். அங்கே தன் தோழர்களுடன் விளையாடுவான்; சாயங்காலம் மாடுகளை ஓட்டிக் கொண்டு வீட்டுக்குத் திரும்பி வருவான். ஒரு நாள் யாதவர்கள் கோவர்த்தன மலையின்கீழ் இந்திரனுக்குப் பொங்கல் இட்டார்கள். ஆனால், கிருஷ்ணன்



அதைவாங்கிச் சாப்பிட்டுவிட்டான். இந்திரன் கோபங்கொண்டு பெருமழை பெய்யச் செய்தான். அம்மழை விடாமல் ஏழு நாட்கள் பெய்தது. கிருஷ்ணனே, அம்மலையைத் தூக்கிக் குடையாகப் பிடித்தான். ஆ! ஆ! என்ன ஆச்சரியம்! படத்தைப் பார்! கிருஷ்ணன் ஒரே விரலின்மேல் அந்த மலையைக் குடைபோலத் தூக்கிப் பிடித்துக் கொண்டு நிற்கிறுன். அதன் கீழ் எத்தனை மாடுகளும், இடையர்களும் தங்கி இருக்கிறுர்கள்! மழை ஜலம் அவர்கள் மீது படவேயில்லை. உன்னுல் இவ்விதமான காரியங்களைச் செய்ய முடியுமா?

5 கம்ஸன் கிருஷ்ணனைக் கொல்லப் பலவாறு முயன்றும் முடியவில்லை.



இங்கே பார்! கடைசியாகக் கிருஷ்ணன் என்ன செய்கிறுன்? கிருஷ்ணன் கம்ஸன் இருக்கும் இடத்திற்குப் போகிறுன். அங்கே கம்ஸனேடு சண்டையிட்டு, அவனைக் கீழே தள்ளிக்குத்திக் கொன்று விடுகிறுன்.

இப்படியே, கடவுள் மனிதரூபமாக வந்து துஷ்டர்களைக் கண்டித்து, நல்லவர்களைக் காப்பாற்றுகிறுர்.

பழமொழி:—அடாது செய்பவர் படாது படுவர்.

அர்த்தம் :—மடு=ஆழமான நீர்நிலை. நதி=ஆறு. யாதவர்=இடையர். அடாது=தகாதது.

கேள்விகள் :—(1) கன்று எப்படி இறந்தது? (2) கிருஷ்ணன் யமுனையில் செய்த நன்மை யாது? (3) கிருஷ்ணன் ஏன் மலையைக் குடையாகப் பிடித்தான்? (4) கிருஷ்ணனுக்கும் கம்ஸனுக்கும் நேர்ந்த பகை எப்படி முடிந்தது? (5) கிருஷ்ணன் கதையால் நீ தெரிந்து கொள்ளும் நீதி என்ன?

கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்து வாசி :—(1) கிருஷ்ணன்—தூக்கி விளாமரத்தில்—கொன்றான். (2) பாம்பின்—பிடித்து தலையை—கூத்தாடினான். (3) மலையைத் தூக்கி—பிடித்தான். (4) கடவுள்—ரூபமாக வந்து—கண்டித்து காப்பாற்றுகிறார்.

சித்திரம் :—பாம்பு.

---

14. பிராணிகள்

1. பிராணிகள் என்பவை பிராணன் உள்ளவைகளாம். பிராணன், ஜீவன், உயிர் என்னும் இம்மூன்று சொற்களும் ஒரே பொருளைக் குறிக்கும். நமக்கு உயிர் உண்டு. ஆகையால், நாமும் பிராணிகளேயாம். ஆனால், நாம் மிகவும் சிறந்த அறிவுடையவர்கள். ஆனதால், நாம் பிராணிகளில் உயர்ந்தவர்கள்.

2. பறவை, மிருகம் முதலிய பிராணிகள் தாழ்ந்த அறிவுடையன. அவைகளுக்கு நம்மைப்போல் பேச முடியாது. ஆகையால், அவை யாவும் நம்மைப் பார்க்கிலும் தாழ்ந்த பிராணிகளேயாம். அவைகளும் நம்மைப்போல் உணவு உண்கின்றன; நீர் அருந்துகின்றன; அயர்ந்து தூங்குகின்றன.

3. நமக்குக் கைகள் இருக்கின்றன. மிருகங்களுக்குக் கைகள் இல்லை. நாம் கைகளை உபயோகித்துப் பல வேலைகளைச் செய்கிறோம். நமக்கு இரண்டு கால்கள் மட்டும் உள. ஆனால் மிருகங்களுக்கு நான்கு கால்கள் உள. அவை நான்கு கால்களினாலும் நடக்கின்றன. காலால் நடப்பவை எல்லாம் நடக்கும் பிராணிகளாம். நாமும் கால்களினால் நடக்கிறோம். ஆகையால் நாமும் நடக்கும் பிராணிகளேயாம். ஆடு, மாடு, நாய் முதலியவைகளும் நடப்பனவாம்.

4. சில உயிர்ப் பிராணிகள் காலால் நடப்பதோடு ஆகாயத்திலும் பறக்கின்றன. அவைகளுக்குப் பறவைகள் அல்லது பட்சிகள் என்று பெயர். பறக்கிறதற்கு அநுகூலமாக அவைகளுக்கு இரண்டு பக்கங்களிலும் சிறகுகள் அமைந்திருக்கின்றன. காகம், கிளி, புறா, குருவி முதலியன பட்சி இனத்தைச் சேர்ந்தவை. பட்சிகளுக்கும் இரண்டு கால்கள் இருக்கின்றன.

5. தண்ணீரில் நீந்திச் செல்லும் பிராணிகள் எல்லாம் நீந்துவனவாம். அவை பெரும்பாலும் நீரிலேயே வாழும். சில நீரிலும் நிலத்திலும் வாழ்கின்றன. மீன், சுறா முதலியவை நீரில் வாழ்வன. தவளை, நண்டு முதலியவை நீரிலும் நிலத்திலும் வசிக்கக் கூடியவை.

6. நிலத்தின்மேல் ஊர்ந்து செல்லும் பிராணிகளை ஊர்வன என்கிறோம். எறும்பு, நத்தை, பாம்பு, பூரான் முதலியவை ஊர்வனவாம்.

7. ஆகவே, பிராணிகள் எல்லாம் நடப்பன, பறப்பன, நீந்துவன, ஊர்வன என நான்கு வகைப்படும்.

பழமொழிகள் :—(1) மீன் குஞ்சுக்கு நீந்தப் பழக்க வேண்டுமா ? (2) எறும்பு ஊரக் கல் குழியும்.

அர்த்தம் :—அநுகூலம்=உதவி. ஊர்ந்து=நகர்ந்து குழியும்=பள்ளமாகும்.

கேள்விகள் :—(1) 'பிராணன்' என்பதற்கு வேறு பெயர்கள் கூறு. (2) பிராணிகளுள் உயர்ந்தவையும் தாழ்ந்தவையும் எவை? (3) நமக்குப் மற்ற பிராணிகளுக்கும் உள்ள முக்கிய வித்தியாசங்கள் யாவை? (4) பிராணிகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை? (5) நடப்பவை, பறப்பவை, நீந்துபவை, ஊர்பவை ஆகிய பிராணிகளில் ஒவ்வோர் இனத்திற்கும் சில உதாரணங்கள் கூறு.

கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்து வாசி :—(1)—நாம் உயர்ந்தவர்கள். (2) பறவைகளுக்கு இரண்டு பக்கங்களிலும்—அமைந்திருக்கின்றன. (3) நீரில் செல்லும்—எல்லாம் நீந்துவனவாம். (4) நிலத்தின்மேல்—செல்லும் பிராணிகளை—என்கிறோம். (5 பிராணிகள் எல்லாம்—,—,—,—என நான்கு வகைப்படும்.

15. மரமும் அதன் முக்கிய உறுப்புக்களும்



1. உலகத்திலுள்ள பிராணிகளில் பல நடக்கின்றன. பல பறக்கின்றன; பல நீரில் நீந்துகின்றன; பல ஊர்ந்து செல்லுகின்றன. ஆனால், நடக்காமலும், பறக்காமலும், நீந்தாமலும், ஊர்ந்து செல்லாமலும் ஒரே இடத்தில் இருக்கும் பிராணிகள் இருக்கின்றனவா? ஆம், அப்படிப்பட்ட பிராணிகளும் உள. நாம் இப்பொழுது அவற்றைக் குறித்துத் தெரிந்து கொள்வோம்.

2. உயிருள்ளன சில பிறந்த இடத்திலேயே நிற்கும்; அங்கேயே வளரும்; கிழமானால் அவ்விடத்திலேயே செத்துப்போகும். இவைகள் புல், செடி, கொடி, மரங்களாம். இவை நின்ற இடத்தில் இருந்தே காற்று, நீர், உரம் ஆகிய உணவுகளை உண்டு வளர்கின்றன. ஒரே இடத்தில் நிலையாக இருக்கிறபடியால் இவைகளைத் தாவரம் என்று கூறுகிறோம். ஸ்தாவரம் அல்லது தாவரம் என்பதற்கு 'நிலையாக இருப்பது' என்று அர்த்தம்.

3. தாவரங்களில் மிகப் பெரியது மரம். நமக்குக் கை கால் முதலிய அவயவங்கள் இருக்கின்றன. அப்படியே மரத்துக்கும் அவயவங்

கள் இருக்கின்றன. அவயவங்கள் என்றால் 'உடம்பின் உறுப்புக்கள்' அல்லது 'பாகங்கள்'. ஆனால், மரத்தினுடைய உறுப்புக்களைக் கவனியுங்கள்.

4. நமக்குக் கால்கள் இரண்டேயாம்; மரத்துக்கோ கால்கள் பலவாம். படத்தைப் பார்! பூமி மட்டத்துக்குக் கீழே பல பக்கங்களிலும் பெரியவைகளும் சிறியவைகளுமான பல வேர்கள் ஓடுகின்றன. அவைகளே அதன் கால்களாம். அவற்றின் நடுவில் இருக்கும் பெரிய வேர்தான் ஆணிவேர் என்பது. மற்றவை யாவும் பக்க வேர்கள். பக்க வேர்களிலிருந்து கிளைவேர்கள் பிரிகின்றன. மரம் காற்றினால் சாயாமல் உறுதியாய் நிற்பதற்கு வேர்கள் எல்லாம் உதவுகின்றன.

5. மேலும், அந்த வேர்களே மரத்துக்கு வாய்களாகவும் இருக்கின்றன. என்ன ஆச்சரியம்! மரம் அவ் வேர்கள் மூலமாகவே பூமியிலிருக்கும் உணவுப் பொருள்களை நீரில் கரைத்து, உறிஞ்சி வளருகிறது.

6. நாமும் மற்றைப் பிராணிகளும் மூச்சு விடுவதுபோல மரமும் மூச்சு விடுகிறது. மரத்தின் மேல்பாகத்தில் பல கிளைகள் பிரிந்திருக்கின்றன. அக்கிளைகளில் உள்ள இலைகளே மரத்துக்கு மூச்சு விட உதவுகின்றன. அவ்விலைகளில் கண்ணுக்குத் தெரியாத பல சிறு துவாரங்கள் உள. அவைகள் மூலமாகவே மரம் காற்றைச் சுவாசிக்கிறது. இன்னும் மரத்துக்குள்ள மற்றைப் பாகங்களைப் பற்றி மேல் வகுப்புக்களில் அறியலாம்.

அர்த்தம்:—உரம்=எரு. தாவரம்=நிலையாக இருப்பது; மரம், செடி, கொடி, புல், பூண்டு இவைகளுக்குப் பொதுப் பெயர். சுவாசிக்கிறது=மூச்சுவிடுகிறது.

கேள்விகள் :—(1) இடம் பேராத பிராணிகள் எவை? அவைகளுக்குப் பொதுவாய் வழங்கும் பெயர் யாது? (2) மரங்களின் உணவு யாது? (3) மரங்கள் உணவை எப்படி உட்கொள்கின்றன? (4) மரங்களின் உறுப்புக்களை எல்லாம் சொல். (5) மரங்களுக்கு வேர்களாலும் இலைகளாலும் என்ன உபயோகம்? (6) வேர்கள் எத்தனை விதம்? அவை யாவை?

கீழ் வரும் சொற்களில் ஒவ்வொன்றையும் சிறு சிறு வாக்கியத்தில் அமைத்துச் சொல்: (1) தாவரம் (2) உறுப்பு (3) ஆணிவேர் (4) எரு (5) காற்று (6) மூச்சு (7) உதவுகிறது (8) கரைத்து (9) உறிஞ்சி (10) சுவாசிக்கிறது.

சித்திரம்:—மரம்.

---

16. சோழ நாட்டின் சிறப்பு

1. சோழனது சீமையிலே
   சொரிகிறதே பெருமழையும்,
2. கடலிரைச்சல் போலன்றோ
   கதறுவன மேகமெல்லாம்,
3. சோனை மழையேதான்
   சொரிந்திடும் பூமி எங்கும்,
4. நல்ல மழையினாலே
   நாடு செழித்திடவே,
5. ஏரி குளம் நிரம்பி
   ஏகவெள்ளம் பாய்கிறதே!
6. ஆறுகள் நிரம்புவதால்
   அக்கரையும் தோன்றாதே!

7. கால்வாய்கள் கரை புரண்டு,
கழனி பள்ளம் தாம் நிரம்பி,
8. ஊற்றுகள் மிகச் சுரந்து
ஓடுகிறதே ஜலம் விசையாய்!
9. உலர்ந்த மரங்களெல்லாம்
உயிர்பெற்றுத் துளிர்த்திடுமே,
10. காடு செடிகளெல்லாம்
கனமாகத் தளிர்த்திடுமே.
11. காயா மரங்களெல்லாம்
காய்த்துக் கனிந்திடுமே,
12. செந்நெல் விளைந்திடவே
செழிப்பாகும் பூமி எங்கும்,
13. சோலைகளில் சாலைகளில்
சூழ்ந்த தடாகங்களில்,
14. குருவி பல அடுத்தனவாம்
குயில் பாடக் குளிர்ந்தனவாம்.
15. பண்டு பழம் பல தின்றே
களித்தன பறவை யெல்லாம்.
16. பயிரிடுங் குடிகளுமே
பலப்பட்டே பூமியின் மேல்
17. ஏர்கட்டி உழுவாராம்
இள நாற்று நடுவாராம்.
18. ஆகவே, பெற்றவளம்
அறியுமே தேசமெல்லாம்.
19. ஓடுங் குடிகளெல்லாம்
ஊர்வந்து சேர்ந்திடுமே;
20. சோழ ராஜன் பட்டணத்தில்
சுகப்பட்டு வாழ்ந்திடுமே.

---

17. ஒரு மந்திரியின் தந்திரம்

1. முன்ஒரு காலத்தில் மதுரையில் மாறன் என்ற ஓர் அரசன் இருந்தான். அவன் வரி வசூல்செய்ய ஒருயோக்கியனை நியமிக்க எண்ணினான். அதைத் தன் மந்திரி மதியூகி யிடம் தெரிவித்தான். மதியூகி ஊரெங்கும் பறை அறைவித்து, அதை யாவருக்கும் தெரிவிக்கும்படி கட்டளையிட்டான்.

2. அதைக்கேட்ட பலர் மந்திரியிடம் வந்தார்கள். வந்தவர்களில் ஒவ்வொருவனும் அந்த உத்தியோகத்தைத் தனக்கே கொடுக்கும்படியாகக் கேட்டான். அப்போது, மந்திரி ஒரு தந்திரம் செய்தான். அவர்களைத் தனித்தனியாக, ஓர் இருண்ட அறையின் வழியாய் அரசனிடம் அனுப்பினான். எல்லோரும் அரசன் முன் வந்து கூடினார்கள்.

3. உடனே மந்திரி அவர்களைப் பார்த்து, "எவன் மகாராஜா முன் நன்றாகக் கூத்தாடுகிறானோ, அவனுக்கே அவ்வேலை கொடுக்கப்படும்" என்றான்.



அதைக்கேட்டதும் எல்லோரும் தயங்கி நின்றார்கள். ஆனால், ஒருவன் மாத்திரம் ஆட ஒப்புக் கொண்டு சந்தோஷ மாகவும் நன்றாகவும்குதித்து ஆடினான்.

4. அப்போது மந்திரி மதியூகி அரசனைப் பார்த்து, "பிரபுவே! இவர்களில் கூத்தாடின

வனே யோக்கியன். அதற்குக் காரணம் சொல்லு கிறேன், கேளுங்கள். நான் இவர்களைச் சோதிக்க எண்ணி இவர்கள் வந்த இருட்டறையில் பொற்காசுள்ள பெட்டிகளைத் திறந்து வைத்திருந்தேன். இவன் மனம் கள்ளமும், கபடும் இல்லாதது. ஆனதால், இருட்டறை வழியாக வரும்போது, இவன் மாத்திரம் அப் பொன் நாணயங்களைத் திருடவில்லை. மற்றவர் களோ பேராசை கொண்டு, தங்கள் சட்டைப் பைகளில் காசுகளை நிரப்பிக் கொண்டார்கள். ஆகையால், அவர்கள் ஆடும்போது ஓசை கேட்கும் என்று பயந்து ஆடவில்லை. அவர் கள் அயோக்கியர்கள். அவர்களைச் சோதித் தால் உண்மை விளங்கும்'' என்றான்.

5. அப்படியே, அரசன் அவர்களைச் சோதித்து உண்மையை அறிந்தான்; மதியூகி யின் சூழ்ச்சித் திறமைக்காக அவனை மிகவும் மெச்சினான்; யோக்கியனைப் புகழ்ந்து, வரிவசூ லிக்கும் உத்தியோகத்தில் நியமித்தான்; மற்ற அயோக்கியர்களைத் தண்டித்தான்.

பழமொழிகள் :—(1) வெள்ளைக்கில்லை கள் ளச் சிந்தை. (2)இருட்டிலே போனாலும் திருட் டுக் கை நிற்காது.

அர்த்தம் :—யோக்கியனை=நம்பத்தகுந்தவனை. பறை=தமுக்கு, தம்பட்டம். விளம்பரம்=அறிக்கை. சோதிக்க=பரீக்ஷை செய்ய. கள்ளம்=திருட்டுத்தனம். கபடு=வஞ்சனை. சூழ்ச்சி=தந்திரம். வெள்ளை=கபட மில்லாதவன். சிந்தை=மனம்.

கேள்விகள் :—(1)அரசன் மதியூகிக்குத் தெரிவித்த தென்ன? (2) மதியூகி செய்த சூழ்ச்சி யாது? (3) மந்திரி

எப்படி யோக்கியனைத் தெரிந்தெடுத்தான் ? (4) அரசன் அயோக்கியர்களை என்ன செய்தான் ?

கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்து வாசி :—(1) வந்தவர்களில் — அந்த — தனக்கே — படி கேட்டான். (2)மதியூகி ஒரு — செய்தான். (3) இவர் களில்—யோக்கியன். (4) இவன் மனம்—, —இல்லாதது. (5) அயோக்கியர்களை அரசன்—.

சித்திரம் :—காசு. காசு வைக்கும் பை.

18. கிராமொபோன்

1. சிறுவர்களே ! நீங்கள் எல்லோரும் பாட விரும்புகிறீர்கள். அப்படியே பாடக் கேட்கவும் விரும்புகிறீர்கள். உங்களைப் போல வே மற்றவர்களும் பாட்டுக்கேட்கவிரும்புகிறார் கள். இனிமையான பாட்டைக் கேட்டு நாம் எல்லோரும சந்தோஷப்படுகிறோம்.

2. ஆனால், எல்லோரும் இனிமையாகப் பாடமுடியாது. சிலர் மட்டுமே இனிமையாகப் பாடுவார்கள். சிலர் பிடில், வீணை முதலிய வாத்தியக் கருவிகளை நன்றாய் வாசிப்பார்கள். நன்றாய்ப் பாடுகிறவர்களும் நன்றாய் வாத்தியங்களை வாசிக்கிறவர்களும் மிகவும் சிலரே. ஆகையால், நாம் அவர்களுடைய பாட்டை வேண்டிய போதெல்லாம் கேட்க முடியாது. நாம் விரும்பும்போது நல்ல பாடல்களும் நல்ல வாத்தியங்களும் கேட்க என்ன செய்யலாம்?

3. நம்மிடம் ஒரு கிராமொபோன் பெட்டியிருந்தால் நாம் எப்பொழுதும் நல்ல பாடல்களைக் கேட்கலாம். நீங்கள் கிராமொபோன் பெட்டியைப் பார்த்திருக்கிறீர்களா? படத்திலிருக்கும் கிராமொபோன் பெட்டியைப் பாருங்கள்.

4. இந்தப் பெட்டிக்குள் ஒரு யந்திரம் இருக்கிறது. அந்த யந்திரம் ஒரு கடிகாரத்தின் யந்திரத்தைப் போன்றது. யந்திரம் சுற்றும்போது பெட்டியின் மேலிருக்கிற வட்டத் தட்டு சுற்றும்.

5. பெட்டிக்குப் பக்கத்தில் ஒரு கை இருக்கிறது. அந்தக் கையிலிருந்து ஒரு குழாய் நீண்டு நிற்கும். அந்தக் குழாயின் கடைசியில் ஒரு சிறு கருவி இருக்கிறது. அந்தக் கருவியை ஒலிப்பெட்டி என்பார்கள். அதன் நுனியில் ஓர் ஊசி யிருக்கும். பெட்டிக்குப் பக்கத்திலுள்ள கையிலிருந்து ஒரு 'புனல்' மேலே எழுந்து நிற்கிறதைப் பார். இப் "புனல்" இல்லாத கிராமொபோன் பெட்டிகளும் உள.

6. பெட்டிக்கு மேல் இருக்கிற தட்டில் பாட்டுத் தட்டுகளை வைக்க வேண்டும். பாட்டுத்

தட்டுகள் அரக்கிஞல் செய்யப்பட்டவை. அவற்றில் வட்ட வளையமாகக்கோடுகள் பல காணும். பலவிதமான பாட்டுத் தட்டுகள் உள. சில வாய்ப்பாட்டுப் பாடும் தட்டுகளாயிருக்கும்; சில வாத்தியம் வாசிக்கும் தட்டுகளாயிருக்கும்; சில வேடிக்கைத் தட்டுகளாயிருக்கும்; சில பேச்சுத் தட்டுகளாயிருக்கும்.

7. பாட்டுத் தட்டொன்றைப் பெட்டியின் மேல் இருக்கும் தட்டின் மீது வைத்து யந்திரத்திற்குச் சாவி கொடுக்க வேண்டும். பின்பு, தட்டின் தடையை நீக்கி விட்டால் தட்டு சுழலும். அப்பொழுது ஒலிப்பெட்டியின் நுனியிலிருக்கும் ஊசியைத் தட்டின் கோடுகளில் முதற் கோட்டில் வைக்க வேண்டும். அப்பொழுது 'புனல்' வழியாகப் பாட்டுக் கேட்கும். நாம் எந்தத் தட்டை வைக்கிருேமோ அந்தத் தட்டின் பாட்டுக் கேட்கும். நமக்கு வேண்டும் போதெல்லாம் பாட்டுக் கேட்பதற்குக் கிராமொபோன் பெட்டியே மிகவும் பிரயோசனமானதாகும்.

அர்த்தம் :—ஒலி = சத்தம். கோடு = வரி. காணும் = தோன்றும். சாவி கொடுத்தல் = யந்திரத்தின் வில்லை முறுக்குதல். தடை = ஓடாமல் நிறுத்தும் ஆணி. சுழலும் = சுற்றும். பிரயோசனம் = உதவி.

கேள்விகள் :—(1) கிராமொபோன் பெட்டியின் மேலிருக்கும் வட்டத் தட்டை ஓடச் செய்வது எது? (2) பாட்டுத் தட்டுகளைக் குறித்து உனக்குஎன்ன தெரியும்? (3) கிராமொபோன் பாடும்படி என்ன செய்யவேண்டும்?

19. நல்லொழுக்கம்

1. நாம் பிரதி தினமும் பல காரியங்களைச் செய்கிறோம்; பல வார்த்தைகளைப் பேசுகிறோம்; பல எண்ணங்களை நினைக்கிறோம். இவைகளில் சில நல்லவை; அவை புண்ணியமானவை. சில கெட்டவை; இவை பாபமானவை. நல்ல காரியங்களைச் செய்வதும், நல்ல வார்த்தைகளைப் பேசுவதும், நல்ல எண்ணங்களை நினைப்பதும் நல்லொழுக்கமாகும். கெட்ட காரியங்களைச் செய்வதும், கெட்ட வார்த்தைகளைப் பேசுவதும், கெட்ட எண்ணங்களை நினைப்பதும் தீய ஒழுக்கமாகும்.

2. நாம் சிலரை நல்லவர்கள் என்றும், மற்றும் சிலரைக் கெட்டவர்கள் என்றும் சொல்லுகிறோம் அல்லவா? நல்லவர்கள் யார்? கெட்டவர்கள் யார்?

3. உங்களில் சிலர் பெற்றோருக்கும், பெரியோருக்கும், உபாத்தியாயருக்கும், அரசருக்கும் கீழ்ப்படிந்து அவர்கள் சொற்படி நடக்கிறார்கள். அவர்களே நல்லவர்கள்.

4. நல்ல மாணுக்கன் முயற்சியோடு சுறுசுறுப்பாய்ப் பாடங்களைப் படிப்பான்; தன் வேலையை ஊக்கத்தோடும், சந்தோஷத்தோடும் செய்வான். கெட்ட மாணுக்கனோ, பெரியோர்களுக்குக் கீழ்படியாமலும், தன் வேலையைச் செய்யாமலும் விளையாட்டிலேயே காலத்தை வீணுகக் கழிப்பான்.

5. நீ நல்லவனுக வேண்டுமானுல் குற்றமானவைகளை விலக்கி நல்ல ஒழுக்கத்தைக்

கைப்பற்றவேண்டும். நல்ல ஒழுக்கம் பெற நாம் செய்யவேண்டிய காரியங்கள் பல உள.

6. எல்லாரிடத்திலும் பொறுமையாகவும், மரியாதையாகவும், அடக்கமாகவும் இருக்க வேண்டும்; இனிமையாகப் பேசவேண்டும்; உண்மையையே உரைக்கவேண்டும். மனிதரிடத்திலும், மிருகம், பறவை முதலிய ஜீவப் பிராணிகளிடத்திலும் அன்பாகவும், தயவாகவும், துன்பம் செய்யாமலும் இருக்க வேண்டும். யாவருடனும் ஒற்றுமையா யிருப்பது அவசியம். பிறர் செய்த உபகாரத்தை ஒருக்காலும் மறக்கக் கூடாது.

7. தீய வொழுக்கமாகிய பொய், களவு, கோபம், கோள், சோம்பல், பேராசை, பொறுமை, கெட்ட சிநேகம் முதலியவைகளை விலக்க வேண்டும். வீண் வம்பு வளர்க்கலாகாது; வீண் பெருமை கொள்ளலாகாது; ஒருபோதும் கெட்ட வார்த்தை பேசக்கூடாது.

8. நல்லொழுக்கத்தை யாவரும், எங்கும், எப்பொழுதும் விரும்புகிறார்கள். அதனால், நமக்குப் பேரும், புகழும், சுகமும் உண்டாகும். தீய வொழுக்கத்தையோ எங்கும், எவரும், ஒருபொழுதும் விரும்புவதில்லை எங்கும் தீய வொழுக்கம் உள்ளவனை எல்லோரும் கண்டித்து இகழ்கிறார்கள். அவனுக்கு எப்பொழுதும் கஷ்டந்தான்.

9. ஆகையால், நாம் குற்றமானவைகளை ஒழித்து, நல்லவைகளை விருப்பத்தோடு செய்ய வேண்டும். இதையே நல்வழி, நன்னடக்கை, நன்மார்க்கம், நல்லொழுக்கம் என்று பல

வாருகச் சொல்லுகிறோம். இந்த நல்லொழுக்கத்தைக் கைக்கொள்ள இளம்வயது முதல் பழகி வரவேண்டும். பால்யத்தில் உண்டான பழக்கந் தான் வயதான பின்பும் வரும். ஆகையால், கெட்ட ஒழுக்கத்திற்குச் சிறிதும் இடம் கொடுக்கக்கூடாது.

பழமொழிகள்:—(1) ஒழுங்கீனம் மதியீனம். (2) ஒழுக்கம் உயர்குலத்தின் நன்று.

அர்த்தம்:—தீய = கெட்ட. முயற்சி = பிரயாசை. குற்றமானவை = தவறானவை. கோள் = புறங்தூற்றல், குறளை உரைக்க = சொல்ல. களவு = திருட்டு. இகழ்கிறார்கள் = அவமதிக்கிறார்கள். ஈனம் = கேடு. குலம் = வம்சம்.

கேள்விகள்:—(1) நல்லொழுக்கமாவது யாது? (2) தீய ஒழுக்கமாவது யாது? (3) நல்ல மாணாக்கனுக்கும் கெட்ட மாணாக்கனுக்கும் உள்ள வித்தியாசம் என்ன? (4) நல்லொழுக்கம் பெற நாம் செய்ய வேண்டியவை யாவை? (5) தீயவொழுக்கத்தால் நேரும் தீமை யாது? (6) நல்லொழுக்கத்தின் வேறு பெயர்களைச் சொல்.

கீழ்வரும் சொற்களில் ஒவ்வொன்றையும் சிறுசிறுவாக்கியத்தில் அமைத்துச் சொல்:—(1) நல்லொழுக்கம். (2) தீயவொழுக்கம். (3) கீழ்ப்படிந்து. (4) கைப்பற்றவேண்டும். (5) உரைக்க வேண்டும். (6) ஜீவப்பிராணிகளிடத்தில். (7) விரும்புகிறார்கள். (8) இகழ்கிறார்கள். (9) ஒழுங்கீனம்.

20. கோபால கிருஷ்ண கோகலே

1. இப்படத்தில் காண்பவர் யார் தெரியுமா? இவர் தான் கோபால கிருஷ்ண கோகலே என்னும் புண்ணியவான். இவர் தம்முடைய சுகத்தைக் கோரவில்லை. இவர் சுயநலம் பாராட்டாமல் நமது தேசத்திற்காகப் பாடு பட்டவர்; தமது உடல், பொருள், ஆவியை நமக்காகத் தத்தம் செய்தவர். நாம் இவரை மறக்கக் கூடாது. அதனாலேதான், நமது பாடபுத்தகங்கள் இவர்பெயரால் எழுதப் பட்டுள்ளன.

2. இவர் மகாராஷ்டிர தேசத்தவர். அங்கே சுமார் அறுபது வருஷங்களுக்குமுன் இவர் ஒரு ஏழைக் குடும்பத்தில் பிறந்தார். நமது தேசத்தில் அநேக ஏழைக் குடும்பங்கள் உள. ஆனால் அவைகளில் உள்ள பிள்ளைகள் குடும்பக் கஷ்டத்தை அறியாமலே இருக்கிறார்கள்; அதிக விளையாட்டில் காலம் போக்குகிறார்கள்.

3. அவர்களைப் போலவே, கோகலேயும் தம் சிறு வயதில் இருந்தார்; கோலியாடுதல், காற்றாடி பறக்க விடுதல் முதலிய பல விளையாட்டில் ஆழ்ந்திருந்தார். ஆனால், கோகலே பன்னிரண்டு வயது அடைந்தபோது அவருடைய

தகப்பனுர் இறந்துவிட்டார். அப்போதுதான் இவருக்கு குடும்பக் கஷ்டம் தோன்றியது.

4. அதுமுதல் இவர் ஊக்கத்தோடு படித்தார் ; கல்வியில் தம் மனத்தை ஊன்றினுர். இவருடைய தமயனுர் மிகவும் தாழ்ந்த நிலையில் இருந்தார் ; ஆயினும், இவரைப் படிப்பிக்க எல்லா உதவிகளும் செய்துவந்தார். கோகலே யாதொரு தடையும் இன்றி மேன்மேலும் வாசித்தார். ஆங்கிலம், தேச சரித்திரம், இராஜநீதி சாஸ்திரம் முதலிய பல பாடங்களை நன்ருய்க் கற்றறிந்தார். கோகலே தம் பதினெட்டாம் வயதில் பி. ஏ. பரீக்ஷையில் தேறினுர். பின்பு, கலெக்டர் பரிக்ஷைக்காக இவர் சீமைக்குப் போக எண்ணினுர்.

5. ஆனல், முடிவில் கோகலே இந்தியாவிற்கே உழைக்கத் தீர்மானித்தார் ; அப்படியே தக்ஷிண வித்தியா சங்கத்தில் சேர்ந்து இருபது வருஷம் உபாத்தியாயராய் உழைத்தார். செல்வத்தின்மேல் நோக்கம் இல்லாமல் நம்மவருக்காக மிகவும் பாடுபட்டார். ஆங்காங்கு தகுந்த பிரசங்கங்கள் செய்தார்;ஊக்கம் தரும் பத்திரிகைகள் பிரசுரித்தார். இவர் பம்பாய் சட்ட சபையிலும் வைசிராயின் சட்ட சபையிலும் நமக்காக வாதாடினுர்.

6. நாம் அனைவரும் நன்னிலைபெறவேண்டும் என்பதே இவருடைய நோக்கமாயிருந்தது. இவரால் பல நன்மைகள் உண்டாயின. நமது நாட்டு ஊழியத்திற்காக இந்திய சேவைச் சங்கம் ஏற்படுத்தினுர். அந்தச் சங்கத்தாரையும் தம்மைப்போல உழைக்க வேண்டினுர். கோகலே

ஆரம்பக் கல்வியையும், தாழ்ந்த வகுப்பினரை ஆதரித்தலையும் வற்புறுத்தினர். அவரைப் போலவே நீங்களும் நடந்தால், நமது தேசத்தின் க்ஷேமம் எவ்வளவு முன்னேற்றம் அடையும்!

பழமொழிகள் :—(1) கற்கை நன்றே கற்கை நன்றே, பிச்சை புகினும் கற்கை நன்றே. (2) அறிவுடை ஒருவனை அரசனும் விரும்பும்.

அர்த்தம் :—கோரவில்லை=வேண்டவில்லை. சுயநலம்= தன்னுடைய நன்மை. பாராட்டாதவர்=கொண்டாடாதவர். பொருள்=செல்வம். ஆவி=உயிர். ஊக்கம்=உற்சாகம். உழை=வேலைசெய் நோக்கம்=எண்ணம். சட்ட சபை= நியாய முறை ஏற்படுத்தும் சபை. வாது=தர்க்கம். அனைவரும் = எல்லோரும். சேவை = தொண்டு, ஊழியம். சங்கம்=கூட்டம். ஆதரி=காப்பாற்று. வற்புறுத்து= உறுதிப்படுத்து.

கேள்விகள் :—(1) கோபால கிருஷ்ண கோகலே என்பவர் யார்? (2) கோகலேயின் குணம் யாது? (3) கோகலேயின் இளமைப் பருவத்தைப் பற்றி உனக்கென்ன தெரியும்? (4) கோகலேயின் கல்விப் பயிற்சியைப் பற்றி உனக்குத் தெரிந்ததைச் சொல். (5) கோகலே இந்தியாவிற்காக எப்படி உழைத்தார்? (6) கோகலேயின் நோக்கம் யாது? (7) கோகலேயால் உண்டான நன்மைகளில் சில சொல்.

கதை சொல்லப் பழகுதல்:—கோபால கிருஷ்ண கோகலேயின் சரித்திரத்தைச் சுருக்கமாகச் சொல்.

21. ஔவை உபதேசம்—II

ஆத்திசூடி

I. பெருமை தரும் ஒழுக்கம்

1. உத்தமனுய் இரு.
2. காப்பது விரதம்.
3. கேள்வி முயல்.
4. சக்கர நெறி நில்.
5. பொருள் தனைப்போற்றி வாழ்.
6. புகழ்பட வாழ்.

II. சுகம் தரும் ஒழுக்கம்

1. இலவம் பஞ்சில் துயில்.
2. சனி நீராடு.
3. நுண்மை நுகரேல்.
4. நோய்க்கு இடம் கொடேல்.
5. மீதூண் விரும்பேல்.

III. கூட்டொழுக்கம்

1. ஊருடன் கூடி வாழ்.
2. கூடிப் பிரியேல்.
3. சான்ரோர் இனத்திரு.
4. சேரிடம் அறிந்து சேர்.
5. தேசத்தோடு ஒத்து வாழ்.

6. தொன்மை மறவேல்
7. பையலோடு இணங்கேல்.
8. மாற்ருனுக்கு இடங்கொடேல்.
9. மூர்க்கரோடு இணங்கேல்.
10. மேன்மக்கள் சொற் கேள்.

அர்த்தம் .—(I) உத்தமன்=சிறந்தவன். கேள்வி= அறிவாளிகள் சொல்லும் மொழிகள். முயல்=முயற்சி செய்து கேள். சக்கரம்=இராஜ கட்டளை. நெறி=வழி. போற்று=காப்பாற்று. புகழ்பட=கீர்த்தி உண்டாகும் படி.

(II) சனி=சனிக்கிழமை தோறும்; நீராடு= எண்ணெய் தேய்த்து முழுகு. நுண்மை=மாவாயுள்ள பண்டம், சிற்றுண்டி. நுகரேல்=உண்ணுதே. மீதூண்= அதிக உணவு.

(III) சான்றோர்=அறிவும் கல்வியும் நிறைந்தவர். இனம்=கூட்டம். தேசத்தோடு=தேசத்தில் உள்ளவர் களோடு. தொன்மை=பழைய சிநேகம். பையலோடு= சிறு பிள்ளைத்தன்மை யுடையவர்களோடு; அறிவில்லாத வர்களோடு. இணங்கேல்=கூடாதே. மாற்ருன்=பகை வன். மூர்க்கர்=அறிவில்லாதவர். மேன்மக்கள்=அறிவு, கல்வி, ஒழுக்கம் முதலியவைகளில் பெரியோர்.

———

22. ஸ்ரீராமர் விபீஷணருக்கு அருள் செய்தல்

பல்லவி.

இந்தா விபீஷணு—இலாங்காபுரி இராஜ்ஜியம்

அநுபல்லவி.

இந்திராதி தேவர்கள் உள்ளநாள் வரைக்கும்
[இந்தா—

சரணங்கள்.

1. வேதம் உள்ளளவும்—வேத கீதம் உள்ள
[ளவும்—பாரி
ஜாதம் உள்ளளவும்—பஞ்ச பூதம் உள்ளளவும்
இந்தா--இந்தா ; இந்தா—இந்தா [இந்தா—

2. கார் உள்ளளவும்--கடல் நீர் உள்ளளவும்—
[ஈரேழ்
பார் உள்ளளவும்—என்றன் பேர் உள்ளள
[வும்
தந்தேன்—தந்தேன் ; தந்தேன்—தந்தேன்
[இந்தா—
3. கேள்வியும் நீயே—பிரதாவியும் நீயே—என்
ஆவியும் நீயே—சிரஞ்சீவியும் நீயே
சொன்னேன்—சொன்னேன் ; சொன்னேன்
—சொன்னேன். [இந்தா—

குறிப்பு :—இதைப் பிள்ளைகள் மனப்பாடம் செய்யவும்

(இப்பாட்டின் விவரம்)

விபீஷணர் சிநேகம் ஆனபோது, ஸ்ரீராமர் சொன்னதாவது :—

"ஏ! விபீஷணா! இந்தா, உனக்கு இலங்காபுரி இராஜ்ஜியத்தைத் தந்தேன்.

அதை இந்திரன் முதலான தேவர்கள் வாழ்ந்து இருக்கும் நாள் வரைக்கும் நீ ஆளத் தந்தேன்.

இன்னும் வேதங்களும், உபநிஷதங்களும், பாரிஜாதமும், ஆகாசம்—காற்று—நெருப்பு—நீர்—பூமி ஆகியபஞ்சபூதங்கள் இருக்கும் வரைக்கும் நீ ஆளத் தந்தேன்.

மேலும், மேகமும், கடல் நீரும், பதினான்கு உலகங்களும், என்னுடைய பேரும் நிலைத்திருக்கும் வரைக்கும் நீ ஆளத் தந்தேன்.

அல்லாமலும் எல்லா சாஸ்திரங்களைக் கேட்டறிந்தவனும், கீர்த்தி உடையவனும், என் உயிர் போன்றவனும், என்றைக்கும் வாழ்ந்திருக்கும்படியான சிரஞ்சீவியும் நீயே ஆவாய் என்று வாழ்த்திச் சொன்னேன்.

ஆகையால், இந்த இலங்காபுரி இராஜ்ஜியத்தை நீயே ஆண்டுவா."

பழமொழிகள் :—(1) பெரியாரைத் துணைக்கொள். (2) சான்றோர் இனத்து இரு.

23. தெனுலி ராமன்

1. முற்காலத்தில் விஜயநகரத்தைக் கிருஷ்ண தேவராயர் ஆண்டு வந்தார். அவரிடம் ராமன் என்ற ஒரு விகடகவி இருந்தான். அவன் தெனுலி என்னும் ஊரில் பிறந்தவன். அதனுல் எல்லாரும் அவனைத் தெனுலிராமன் என்று கூப்பிடுவது வழக்கம்.

2. தெனுலிராமன் கிருஷ்ண தேவராய ரிடம் விகடமாகப் பேசிப்பொருள் சம்பாதித்து வைத்திருந்தான். அதை அறிந்த சில திருடர் கள், ஒரு நாள் மாலையில் பொழுது சாய்ந்த பின்பு, அவன் வீட்டுப் புறக்கடையில் பதுங்கி இருந்தார்கள். அன்றிரவு, ராமன் சாப்பிட்டுக் கை கழுவப் புறக்கடைக்குச் சென்ருன்; அப் போது திருடர்கள் அங்கே இருப்பதை அவன் கண்டான். உடனே உள்ளே போய், தன் மனைவியிடம் இரகசியமாக அதைச் சொன்னுன். பின்பு, தன் பொருள்களை எல்லாம் பத்திரமாக ஓரிடத்தில் மறைத்து விட்டான்.

3. பிறகு திருடர்கள் காதில் கேட்கும் படியாகத் தன் மனைவியிடம், "பெண்ணே! இன்று நம் ஊரில் திருடர்கள் வந்திருப்பதாகக் கேள்வி. ஆகையால், நம் பொருள்களை எல் லாம் இந்தப் பெரிய பெட்டியில் அடக்கம் செய்வோம்; பின்பு, இதைக் கிணற்றில் போடு வோம்; திருடர்கள் சென்றதும் எடுத்துக் கொள்ளலாம்" என்ருன்.

4. பின்பு, அவன் ஒரு பெட்டி நிறையக் கற்களை நிரப்பினுன். அவனும் அவன் மனைவியும்

மகனும் ஒன்று சேர்ந்து அதைத் தூக்கிக்



கொண்டு போய், தங்கள் தோட்டத்துக் கிணற்றில் போட்டு விட்டார்கள்.

5. தெனாலிராமன்சொன்னதையும், பெட்டி கிணற்றில் விழுந்த ஓசையையும் திருடர்கள் கேட்டிருந்தார்கள். ஊர் ஓசை அடங்கிய பின், அவர்கள் களிப்போடு கிணற்றுக்குப் போனார்கள். கிணற்றிலோ, நீர் அதிகமாக இருந்தது. ஆகையால், பெட்டியை எளிதில் எடுக்க முடியாது என்று கண்டார்கள். கிணற்று நீரை இறைத்துப் பெட்டியை எடுப்பதற்கு எண்ணினார்கள். உடனே, எல்லோரும் சேர்ந்து அங்கிருந்த இரட்டை ஏற்றத்தைப் பிடித்து இறைத்தார்கள்.

6. தெனாலிராமனோ, தோட்டத்திலிருந்த வாழை, மா, பலா, தென்னை, எலுமிச்சை, கிச்சிலி முதலிய மரங்களுக்கு மடை மாறி நீர் பாய்ச்சினான். திருடர்கள் இதை அறியவில்லை. கிணற்றில் நீர் வற்றாமல் சுரந்து கொண்டே இருந்தது. ஆகையால், அவர்கள் ஏற்றத்தை



நிறுத்தாமல் இறைத்துக்கொண்டே இருந்தார்கள். இதற்குள் பொழுதுவிடியும் நேரமாயிற்று.

7. அப்போது தெனாலிராமன், "தோட்டம் எல்லாம் பாய்ந்து ஆயிற்று; ஏற்றத்தை நிறுத்துங்கள்" என்றான். இதைக் கேட்டதும், திருடர்கள் எல்லோரும் வெட்கி, அஞ்சி, ஓட்டம் எடுத்தார்கள்.



பழமொழிகள்.—(1) பல நாள் திருடன் ஒரு நாள் அகப்படுவான். (2) கள்ள மனம் துள்ளும்.

அர்த்தம் :—விகடகவி=வேடிக்கையாகப் பேசிப் பாடுபவன்; கோமாளி. புறக்கடை = வீட்டின் பின்புறம். பதுங்கி=மறைந்து. பத்திரமாக=பந்தோபஸ்தாக. களிப்போடு = சந்தோஷத்தோடு. மடை = நீர் பாயும் வழி. சுரந்து=ஊறி. வெட்கி=வெட்கப்பட்டு. அஞ்சி=பயந்து துள்ளும்=பதறும்.

கேள்விகள் :—(1) தெனாலிராமன் யார்? (2) தெனாலிராமன் தன் மனைவிக்கு என்னசொன்னான்? (3) தெனாலிராமன் திருடர்களை ஏமாற்றச் செய்த சூழ்ச்சி யாது? (4) தெனாலிராமன் திருடர்களால் அடைந்த லாபம் யாது;

கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்து வாசி:—(1) தெனாலிராமனுடைய—புறக்கடையில்—இருந்தார்கள். (2) பொருள்களை எல்லாம்—ஓரிடத்தில்—விட்டான். (3) ஒரு பெட்டி நிறைய—நிரப்பினான். (4) கிணற்று நீரை—பெட்டியை—எண்ணினார்கள். (5) அங்கிருந்த இரட்டை—பிடித்து—. (6) மரஞ்செடிகளுக்கு—மாறி நீர்—.(7) கிணற்றில் நீர்—இருந்தது. (8) திருடர்கள் எல்லோரும்—,—,ஓட்டம்—. (9) கள்ள—துள்ளும்.

சித்திரம் :—பெட்டி.

24. நிழல்

1. பையா! நான் யார் தெரியுமா? நீ என்னைக் கண்டு பயப்படுகிருயோ? பயப்படாதே! நான் தான் உன் நிழல். நான் உனக்கு ஒரு தோழன். நான் எப்போதும் உன்னை விட்டுப் பிரியாமல் இருப்பேன். ஏதாவது ஒரு வெளிச்சம் உண்டாகும்பொழுது அதற்கு எதிராக நான் தோன்றுவேன். சூரிய வெளிச்சத்தில் மிகவும் நன்ருகவும், சந்திர வெளிச்சத்தில் கொஞ்சம் மங்கலாகவும், நக்ஷத்திர வெளிச்சத்தில் மிகவும் மங்கலாகவும் காணப்படுவேன். மிகவும் இருண்ட இடங்களில் நீ என்னைப் பார்க்கவே முடியாது. என் தெரியுமா?

2. நான் சொல்வதைக் கவனித்துச் செய். அப்போது அதன் காரணம் உனக்குத் தெரியும். நீ சூரியன் பக்கமாக உன் முதுகைத் திருப்பிக் கொண்டு நின்று, சூரியனுக்கு எதிர்ப் புறமாகப் பார்! அப்போது என்ன நேரிடுகிறது? சூரியனிடத்திலிருந்து வரும் வெளிச்சமும் வெப்பமும் உன்னால் சிறிது தூரம் தடைப்படுகின்றன. அதெப்படி என்று கேட்கிறாயா? உன் பின்புறம் சிறிதளவு வெளிச்சத்தையும் வெப்பத்தையும் தாங்கிக் கொள்கிறது. உன் முன்புறத்திலிருந்து சிறிது தூரம் மட்டும் இருண்டு குளிர்ந்திருப்பதைக் கவனி. இதனால் வெளிச்சம் தடைப்படுவதை நீ நன்றாக அறியலாம். அப்படித் தடைப்பட்ட இடத்தில்தான் நான் தோன்றுகிறேன். ஆகையால், நான் காணப்படுவதற்கு வெளிச்சம் அவசியம் வேண்டும்.

3. நான், வெளிச்சம் வருமிடத்திற்கு எதிராக உன் காலடியினின்று தோன்றுவேன். உன் உருவத்தைப் போலவே என் உருவமும் இருக்கும். மேலும், நீ சூரியன் முன்பாக நின்று எந்தப் பக்கம் திரும்பினாலும், நான் ஒரே பக்கமாகத்தான் இருப்பேன். காலையில் நான் எப்போதும் மேற்குத் திசையிலும், உச்சிப் பொழுதில் உன் பாதத்தின் பக்கத்திலும், மாலையில் கிழக்குத் திசையிலும் தோன்றுவேன்.

4. நான் காலை வெய்யிலில் மிகவும் நீண்டு தோன்றுவேன்; பின்பு வரவரக் குறைந்து கொண்டே வருவேன்; முடிவில் நடுப்பகலானதும் மிகவும் குறுகி விடுவேன்; பின்பு, வரவர

வளர்ந்து நீளுவேன்; சூரியன் மறையும்வேளை யில் மிகவும் நீளமாகி, இருட்டோடு கலந்து மறைந்து விடுவேன். எவ்வளவு ஆச்சரியம்! பார்த்தாயா? இப்படியே, நான் ஒவ்வொரு பொருளிடத்திலும் இருக்கிறேன்.

5. நான் இருக்கும் இடங்களில் சூரிய வெப்பம் தாக்காது. ஆகையால், உஷ்ணமான வெயிலில் வழி நடக்கிற பிரயாணிகள் "நிழல் எங்கே?" என்று என்னை நாடி வருகிறார்கள். மிருகங்களும் என்னை விரும்புகின்றன. மேலும், பெரியோர்கள் என் நீளத்தை அளந்து நேரத்தையும் அறிவார்கள்; என்னால் திசையையும் தெரிந்து கொள்ளுகிறார்கள்.

6. நான் எல்லோருக்கும் உபகாரம் செய்கிறேன். நீயும் யாவருக்கும் உபகாரஞ்செய்.

பழமொழிகள்.—(1) நிழலின் அருமை வெய்யிலில் தெரியும். (2) தன் நிழல் தன்னோடு தொடரும்.

அர்த்தம்:—தோழன்=சிநேகிதன். தோன்றுவேன்= காணப்படுவேன். வெப்பம்=உஷ்ணம். பொருள்=வஸ்து. பிரயாணிகள்=ஊர்ப்பயணம் செல்வோர். நாடி=விரும்பி தாக்காது=மோதாது. யாவருக்கும்=எல்லோருக்கும்.

கேள்விகள்:—(1) நிழல் எப்போதும், எப்படி உண்டாகும்? (2) காலை மாலையில் நிழல் எந்தப் பக்கங்களில் விழும்? (3) அப்பொழுது அதன் உருவம் எவ்வாறு இருக்கும்? (4) மிகவும் குறுகிய நிழல் எப்பொழுது உண்டாகும்? (5) நிழலினால் என்ன உபயோகம்? (6) இப்பாடத்தினால் நீ அறியும் நீதி யாது?

———



25. உழவர் பாட்டு

கும்மி

உழவின் பெருமை உரைப்போமே—நித்தம்
ஊருக்கு நன்மை புரிவோமே,
உழவர் குணங்கள் நினைப்போமே—நாளும்
ஊக்கமாய்க் கும்மி யடிப்போமே. (1)

அரிசியன்றோ அமுதாகும்—அந்த
அரிசியும் நெல்லின் உள் இருக்கும்.
அரிசி உள்ள நெல்வேண்டின்—நிலம்
ஆழ்ந்திட ஏரால் உழவேண்டும். (2)

உழவுக்குகந்தது கலப்பையாம்—அதற்
குற்ற நல் கொழுவும் நீண்டிருக்கும்.
உழுமேர்க் கொழுவும் நீண்டிருந்தால்—அது
ஊடறுத் துழுமே நிலந்தன்னை. (3)

கொட்டிய உரத்தை உழுதடித்தே—முளை
  கட்டிய நெல்லை விதைப்பாரே;
திட்டமாய் மழைமுகம் நோக்கிடவே—அங்கே
  எட்டியே பார்க்கும் நெற்பயிரே. (4)
நெல்லை வளர்க்கநீர் வேண்டும்—அந்தத்
  தெளி நீர் பெருக மழைவேண்டும்.
பொல்லா வரட்சி வந்தாலோ—இங்கு
  எல்லாம் செத்தே விழுந்திடுமே. (5)
மழை தான் பெய்யத் தவம் வேண்டும்—நிதம்
  மனதில் அன்பு மிக வேண்டும்.
மழையைத் தருவோர் கடவுளென்று—அவர்
  மலரடி நித்தம் தொழ வேண்டும். (6)
கடவுளைப் பணிந்தே களை பிடுங்கி— நித்தம்
  கண்போல் நெல்லைப் போற்றி வந்தால்,
கருத்து மகிழக் கதிர்காணும்—நல்ல
  கதிரில் முழு நெல் மணிகாணும். (7)
நெல்தனைக் குற்றி உமி நீக்கி—வெள்ளி
  நல்லரி தன்னை அமுதாக்கி
நல்விருந் தோடதை உண்டாலோ—உற்ற
  நலங்களெல்லாம் பெறலாமே (8)

பழமொழி:—உழவிற் சிறந்த ஊழியம் இல்லை.

அர்த்தம்:—உரைப்போம்=சொல்லுவோம். நித்தம்=தினந்தோறும். அன்றோ=அல்லவா? அமுது=சாப்பாடு. வேண்டின் = வேண்டுமானால். ஆழ்ந்திட = குழியும்படி. உகந்தது=பொருத்தமானது. அதற்கு உற்ற = அதற்குப் பொருந்திய. ஊடு அறுத்து=குறுக்கே கிழித்து. நோக்கிடவே=பார்க்கவே. தெளிநீர்=தெளிந்தநீர். வரட்சி=ஈரமில்லாமை. மலர் அடி = பூப்போன்ற காலடி. போற்று=காப்பாற்று. கருத்து=நெஞ்சு. நல்லரி=நல்ல அரிசி.



26. சட்டியும் களிமண்ணும்

ஒரு சாலைவழியில் இருந்த குளக்கரையில் இரண்டு மாட்டு வண்டிகள் நின்று கொண்டிருந்தன. வண்டிக்காரர்கள் மாடுகளைத் தண்ணீர் காட்டக் குளத்திற்குக் கொண்டுபோயிருந்தார்கள். ஒரு வண்டியில் பலவிதமான சட்டி பானைகள் நிறைந்திருந்தன. மற்றொரு வண்டியில் களிமண் நிறைந்திருந்தது. சட்டி பானைகள் நிறைந்திருந்த வண்டியில், ஒரு சட்டி, எதிரே நின்ற வண்டியிலுள்ள களிமண்ணைப் பார்த்துப் பேச ஆரம்பித்தது.

சட்டி :— நீர் யார் ?

களிமண் :— நான் களிமண் ; நீர் யார் ?

சட்டி :— நான் சட்டி.

களிமண் :—சட்டியாரே! எங்கேபோகிறீர்?

சட்டி :—சந்தைக்குப் போகிறேன்.

களிமண்:— நீர் எங்கே இருந்து வருகிறீர்?

சட்டி :— நான் சூளையிலிருந்து வருகிறேன்.

களிமண் :—சூளையில் யார் வீட்டிலோ?

சட்டி:—சூளையில் குயவனார் வீட்டிலிருந்து வருகிறேன்.

களிமண்:— நீர் பிறந்த இடம் அதுதானோ?

சட்டி .—நான் முதன் முதலில் ஒரு குளக் கரையில் கிடந்தேன்.

களிமண் :—நீர் குயவனார் வீட்டிற்கு எப் படிப் போனீர் ?

சட்டி :—களிமண்ணாரே, அந்தக் கதையை என் கேட்கிறீர்? நான் பட்ட பாடு பஞ்சு படுமோ? நான் அந்தக் குளக்கரையில் வாய் அடைத்துச் சும்மா இருந்து வந்தேன். அப் படி இருக்க,ஒரு நாள் ஒரு குயவனார் என்னை வெட்டி எடுத்து வண்டியிலேற்றி வீட்டிற்குக் கொண்டு போனார் ஐயோ! அங்கே நான் பட்ட பாட்டைச் சொல்ல எனக்கு வாயும் கூசுதே.

களிமண் :—அங்கே அப்படி என்ன நடந் தது?

சட்டி :—என்ன நடந்ததா? நீர் கஷ்டப் பட்டால் தானே உமக்குத் தெரியும். ஆனாலும் சொல்லுகிறேன் கேளும்.

அந்த மாயக் குயவனார் அவர்
தடதட என்று தடியால் அடித்தார் ;
மடமட என்று தண்ணீர் ஊற்றி

சளபள என்று காலால் மிதித்தாரே.
மிதித்த மிதியைத் தாங்க மாட்டேன்.
கிளுபிளு கிளுபிளு என்றே அழுதேன்.
கையால் ஓங்கி அறைந்து
காலால் மிதித்து உதைத்து,
மாவாய்ப் பிசைந்து மை போல் குழைத்து,
திரிந்து ஓடிவரும் ஒரு திகிரியில்
பந்தாய் உருட்டிப் பதிய வைத்து
வடிவாக்குங் கையாலே என்னை
வடிவாய் வனைந்தே எடுத்து வைத்தார்.
உரமான வெயிலில் உலர்ந்தே உடம்பில்
ஈரம் இன்றி ஒடுங்கிப் போனேன்.
தீக்கும் தீயாம் செந்தீ மூட்ட
தீக்கோட்டையில் நீறி விட்டேன்.
சட்டி என்றே புதுப்பேரிட்டு
சந்தைக் கடைக்கே என்னை
தட்டிக் கொட்டி அனுப்பிவிட்டாரே.

களிமண் :—சட்டியாரே! நீர் பட்ட பாட்டைக் கேட்க எனக்கு நடுக்கமாக இருக்கிறது. என்னையும் இந்த வண்டிக்காரன் அங்கே தான் கொண்டு போகிறான் போல இருக்கிறது. இதற்கு என்ன செய்யலாம்.

சட்டி :—என்ன செய்ய முடியும்? வருகிற கஷ்டத்தை யெல்லாம் பொறுப்பது தான் மண்ணாகிய நம்மவர் கடமை. சரி, நான் போகிறேன். இதோ! என் வண்டிக்காரன் மாடுகளை ஓட்டிக் கொண்டு வந்து விட்டான்.

களிமண்—நல்லது; அப்படியே போய் வாரும்.

பழமொழிகள்:—(1) குயவனுக்குப் பலநாள் வேலை; தடியடிக்காரனுக்கு ஒரு நாள் வேலை. (2) பூமியைப் போலப் பொறுமை வேண்டும்.

அர்த்தம்:—பட்டபாடு=அடைந்தகஷ்டம். பாட்டை=கஷ்டத்தை. மாயக் குயவனர்=பொல்லாத குயவனர். திரிந்து=சுற்றி. திகிரி=சக்கரம், வனைதல்=செய்தல். உரமான=பலமான. செந்தீ=சிவந்த நெருப்பு. நீறி விட்டேன்=எரிந்து விட்டேன்.

கேள்விகள்:—(1) களிமண்ணும் சட்டியும் எங்கிருந்து வந்தன? (2) மண்ணின் குணம் யாது? அதற்கு உதாரணம் கூறு. (3) குயவன் எப்படிச் சட்டி செய்கிறன் என்று ஐந்து வாக்கியங்களில் எழுதிக் காட்டு. (4) குயவன் பானைகளை என்ன செய்கிறன்?

சித்திரம்:—சட்டியின் படம் எழுதுக.

---

27. பருவங்கள்

1. சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை, மாசி, பங்குனி இந்தப் பன்னிரண்டு மாதங்களும் சேர்ந்து தமிழ் வருஷமாகும். ஒரு வருஷத்தின் 365 நாட்களிலும் கால நிலைமை ஒரேவிதமாக இருக்கிறதில்லை. சில மாதங்களில் உஷ்ணம் அதிகமாகவும், சில மாதங்களில் குளிர் அதிகமாகவும் இருக்கும். சில மாதங்களில் மழை அதிகமாகவும், சில மாதங்களில் பனி அதிகமாகவும் இருக்கும். இம்மாதிரி காலவேறுபாடுகள் ஒவ்வொரு வருஷமும் ஏற்படுகின்றன. ஆதலால், நமது நாட்டில் வருஷத்தை ஆறு

பருவங்களாகப் பிரித்திருக்கிறார்கள். அவை: இளவேனிற் காலம், முதுவேனிற் காலம், கார் காலம், குளிர் காலம், முன் பனிக்காலம், பின் பனிக்காலம் என்பனவாம்.

2. சித்திரையும் வைகாசியும் இளவேனிற் காலம் ஆகும். ஆனியும், ஆடியும் முதுவேனிற் காலம் ஆகும். இளவேனிற் காலத்தில் வெய்யில் கடுமையாக இராது; தென்றல் வீசும்; மரஞ் செடிகள் தளிர்க்கும். முதுவேனிற் காலத்தில் வெய்யில் அதிக உஷ்ணமாயிருக்கும்; மேல் காற்று வீசும்; ஆறு குளங்களில் தண்ணீர் குறைந்து விடும். அப்பொழுது, உஷ்ணத்தைத் தணிக்கும்படியான வசதிகளை நாம் ஏற்படுத்திக் கொள்ளுகிறோம். சித்திரை, வைகாசி, ஆனி மாதங்களில் கலியாணங்களும், கோயில்களில் திருவிழாக்களும் நடைபெறும். இந்த மாதங்களில் மா, பலா முதலிய பழவகைகளும் கிடைக்கும்.

3. ஆவணியும் புரட்டாசியும் கார் காலமாம். ஐப்பசியும் கார்த்திகையும் குளிர் காலமாம். இந்த நான்கு மாதங்களில் மழை அதிகமாய்ப் பெய்யும்; வாடைக் காற்று வீசும்: ஆறு குளங்களில் நீர் நிரம்பி இருக்கும்; பயிர், பச்சைகள் செழித்து வளரும். அக்காலத்தில் நாம் எல்லோரும் ஈரத்தில் நடமாடாமல் எச்சரிக்கையாய் இருக்கவேண்டும்.

4. மார்கழியும் தையும் முன்பனிக் காலம் எனப்படும். மாசியும்பங்குனியும்பின்பனிக் காலம் எனப்படும். முதல்இரண்டு மாதங்களில்இரவுக்கு முன் மாலைப் பொழுதில் பனி அதிகம். பின்

இரண்டு மாதங்களில் இரவுக்குப் பின் காலையில் பனி மிகுதி. இம்மாதங்களில் குளிர் அதிகம். ஆகையால், நாம் கம்பளிப் போர்வைகளை உபயோகிப்பது நல்லது. இந்த மாதங்களில் அறுவடை செய்து தானியங்களைச் சேகரிக்கிறோம்.

5. மேற்கண்ட ஆறு பருவங்களில் ஒவ்வொன்றும் நமக்கு ஒவ்வொரு விதத்தில் நன்மை விளைவிக்கின்றது. இப்பருவங்களுக்கு வேறு பெயர்களும் உண்டு.

1. சித்திரையும் வைகாசியும்—வசந்த ருது.
2. ஆனியும் ஆடியும்—கிரீஷ்ம ருது.
3. ஆவணியும் புரட்டாசியும்—வருஷ ருது.
4. ஐப்பசியும் கார்த்திகையும்—சரத் ருது.
5. மார்கழியும் தையும்—ஹேமந்த ருது.
6. மாசியும் பங்குனியும்—சிசிர ருது.

பழமொழிகள் :—தையும் மாசியும் வையகத் துறங்கு. (2) புரட்டாசியில் பொன் உருகக் காயும்; மண் உருகப் பெய்யும்.

அர்த்தம்:—வேனில்=உஷ்ணம். தென்றல்=தெற்கிலிருந்து வரும் காற்று. தளிர்க்கும்=இலைவிடும். கார்காலம்=மழைகாலம். வாடைக்காற்று=வடக்கிலிருந்து வரும் காற்று. எச்சரிக்கை=ஜாக்கிரதை. விளைவிக்கிறது=உண்டாக்குகிறது. வையகத்து=வைக்கோல் வேய்ந்த வீட்டில்.

கேள்விகள் :—(1) ஒரு வருஷத்திற்கு எத்தனை மாதங்கள்? அவை யாவை? (2) பருவகாலங்கள் எத்தனை? அவை யாவை? (3) அவைகள் வரும் மாதங்களின் பெயர்களைச் சொல். (4) ஒவ்வொரு மாதத்தின் குணம் யாது? (5) எந்த மாதங்களில் மழை பெய்யும்? (6) எந்த மாதங்களில் தானியங்களை அறுவடை செய்கிறோம்? (7) பருவங்களின் பெயர்களைச் சொல்?

கீழ்வரும் சொற்களில் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து வாசி:—(1) காலநிலை. (2) பருவங்கள். (3) இளவேனிற் காலம். (4) முதுவேனிற் காலம். (5) கார் காலம். (6) குளிர் காலம். (7) முன்பனிக்காலம். (8) பின்பனிக் காலம். (9) கிரீஷ்ம ருது. (10) சிசிர ருது.

28. குரு பக்தி

காட்சி 1. இடம் :—காடு.

(அர்ச்சுனன் கையில் வில்லுடன் பரிவாரங்கள் சூழ வேட்டையாடி வருகிறான்.)

அர்ச்சுனன் :—

பாட்டு

வேட்டை யாடுவோம் வாரீர்—(வேட்டை)
காட்டுப் பன்றிகள் வெகு கூட்டங் கூட்டமாய் வந்து
நாட்டிற் பயிரழியச் சேட்டைகள் செய்வதால்,
(வேட்டை)

(பாடிக்கொண்டு வில் வளைத்து அம்புகள் எய்கிறான். பரிவாரங்கள் அம்புகளைப் பொறுக்கிச் சேர்க்கின்றனர்.)

பரிவாரங்களில் ஒருவன் :—(அர்ச்சுனனைப் பார்த்து) வேந்தே! நம்முடைய நாய்களில் ஒன்றை யாரோ ஒருவன் அம்பினால் அடித்து விட்டான். அதோ பாருங்கள்; அது கத்துகிறது.

அர்ச்சுனன் :—(பார்த்து) ஆம்! ஆம்! (கோபக்குறி காட்டி) நம்முடைய நாயை அடித்தவன் எவன்? இப்படிப் பாணம் எய்யத் தெரிந்தவனும் இருக்கிறானா, இங்கே? ஒரு பாணம் நான்காகப் பிரிந்து நான்கு பக்கங்களிலும் காயப்படுத்தியிருக்கிறதே! என்ன விந்தை இது! அஸ்தினாபுரி வேந்தனது ஆட்சி மகிமையை அறியாதவன் போலும் இவன்!—

நல்லது—வாருங்கள் போவோம்; அவனைக் கண்டுபிடிப்போம்.

(நோட்டு மெட்டு)

போவோம் போவோம் போவோம் நாம்
புரிந்த செயல் கண்டறிவோம்—நாம்
(போ—)

(பாடிக் கொண்டே போகிறார்கள்)

காட்சி 2

இடம்:—ஏகலைவன் என்னும் வேட ராஜனுடைய சிலம்பக் கூடம் (துரோணருடைய உருவம் வைத்து மலர்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றது. ஏகலைவன் அதனருகே உட்கார்ந்து பூஜை செய்கிறான். அர்ச்சுனன் பரிவாரங்களுடன் பிரவேசிக்கிறான்.)

அர்ச்சுனன்:

(பரிவாரங்களைப் பார்த்து) நாய் இங்கேதான் வந்து நிற்கிறது. அடித்தவன் இவன்தானோ? இவன் யார்?—ஏதோ உருவம் வைத்துப் பூஜை செய்கிறான். யாருடைய உருவம் இது?

பரிவாரங்களில் ஒருவன்:—(துரோணர் உருவத்தை உற்றுப் பார்த்து) அரசே, இது நமது குருவாகிய துரோணருடைய உருவம் போலிருக்கிறது! கவனியும்.

அர்ச்சுனன்:—ஆம்! ஆம்! இவன் ஏன் அவருடைய திருவுருவத்தைப் பூஜிக்கிறான்?

ஏகலைவன்:—(எழுந்து கை குவித்து நின்று)

விருத்தம்

சகல சாத்திரமும் கற்றுத் தநுர்வேத முழுவதும் தேர்ந்து
புகலென அடைந்த இந்தப் புல்லனை அடிமை கொண்ட

தகைமை சேர்குருவே உன்தன் தாள்மலர் பணியும் ஏழை
அகமெனும் இருக்கை மேவி ஆதரித் தாளுவாயே.

(நமஸ்காரம் செய்து திரும்புகிறான்.)

அர்ச்சுனன் :—நீ யார்?

ஏகலைவன் :—வந்தனம், ஐயா! நான் இக் காட்டில் வசிக்கும் வேடன். என் பெயர் ஏகலைவன்.

அர்ச்சுனன் :—நீ என் நாயை அடித்தாயா?

ஏகலைவன் :—தங்களுடைய நாயென்று தெரியாது. ஒரு நாய் இவ்விடம் வந்து என் சிலம்பக் கூடத்தை அசுத்தமாக்கியது. ஆதலால் அதன்மேல் அம்பு எய்தேன்.

அர்ச்சுனன் :—அப்படியா? உனக்கு அவ்வாறு அம்பு எய்யச் சொல்லி வைத்தவர் யார்?

ஏகலைவன் (குருவின் உருவத்தைக் காட்டி):— இதோ! இந்தக் குருநாதருடையதிருவருளால் நான் உணர்ந்தேன்.

அர்ச்சுனன் :—இவ்வுருவம் எங்கள் குருவாகிய துரோணருடைய தல்லவா?

ஏகலைவன் :—ஆம்! அவரே எனக்கும் குரு.

அர்ச்சுனன் :—அப்படியா? நல்லது— போய் வருகிறோம். (கோபத்துடன் திரும்புகிறான்.)

ஏகலைவன் :—(கை குவித்து) ஏழையின் பிழையைப் பொறுத்தருள வேண்டும்.

அர்ச்சுனன் :—(போய்க் கொண்டே) துரோணர் இவனுக்குக் குருவாமே! என்ன ஆச்சரியமிது! என்னிடத்தில் மிகவும் அன்புடைய

அவர், எனக்குக் கற்பிக்காத ஒரு வித்தையை இவனுக்கு எப்படிச் சொல்லி வைத்தார்?

காட்சி 3

இடம்:—காட்டில் ஒருவழி. (அர்ச்சுனன் துரோணரை அழைத்துக் கொண்டு, பரிவாரங்கள் சூழ வருகிறான்.)

துரோணர்:—நான் இங்கே யாருக்கும் வில் வித்தை சொல்லி வைத்ததேயில்லை. நீ சொல்லுவது ஆச்சரியமாயிருக்கிறதே. வா கவனிப்போம். (போகிறார்கள்)

காட்சி 4

இடம்:—ஏகலைவன் சிலம்பக் கூடம்.

(அர்ச்சுனன் துரோணருடன் பிரவேசிக்கிறான்.)

ஏகலைவன்:—(கண்டதும்) வர வேணும், வர வேணும்! கோடி வந்தனம்; (துரோணரையும், அர்ச்சுனனையும் நமஸ்கரித்து எழுந்து) வீற்றிருக்க வேண்டும்.

துரோணர்:—இருக்கட்டும். நீ என்னிடம் வில்வித்தை கற்றுக்கொண்டாயா? உனக்கு நானா குரு?

ஏகலைவன்:—ஸ்வாமி! தாங்களே எனக்கு குரு; நான் தங்களிடம் வந்து வித்தை கற்றுக் கொடுக்கும்படிக் கேட்டேன். தாங்கள் நேரமில்லை என்று சொல்லிவிட்டீர்கள். அப்பால் நான் தங்களது உருவத்தை வைத்து, அதன் முன் வில் வித்தை பயின்று வந்தேன். தங்களைக் குருவாகக் கொண்ட எனக்கும் கொஞ்சம் வில் வித்தை தெரிந்திருக்கிறது.

(கைகூப்பிக் கும்பிடுகிறான்.)

துரோணர் :—அர்ச்சுனு, கேட்டாயா செய்தியை? நான் உனக்கு வஞ்சனை செய்வேனு? இவனது குருபக்தி இவனுக்கு வித்தையைக் கொடுத்திருக்கிறது.

அர்ச்சுனன் :—ஸ்வாமி, தெரிந்து கொண்டேன். தங்களை இவ்வளவு தூரம் அழைத்துச் சிரமம் தந்தேன்; மன்னிக்கவும் (கும்பிட்ட பின்பு, ஏகலைவனைப் பார்த்து) அப்பா! உன் மகிமை தெரியாமல் உன்னிடம் கோபங்கொண்டேன். நீ பாக்கியசாலி ; நான் இனி உன்னைச் சகோதரனுகக் கருதுவேன்.

ஏகலைவன்:—புண்ணியம் செய்தவன் ஆனேன் !

துரோணர்:—உனக்குக் குருபக்தி இருப்பது உண்மையானுல் உன் வலக்கைப் பெரு விரலை வெட்டி எனக்குக் குருதக்ஷிணையாகக் கொடு, பார்க்கலாம்.

ஏகலைவன்:—இதோ ! (என்று உடனே தன் பெரு விரலை வெட்டித் தருகிறுன்.)

துரோணர்:—நீ நீடூழி வாழ்க ! உன் புகழ் அழியாதிருக்கக் கடவது—(ஆசிர்வாதம் செய்கிறுர். எல்லாரும் ஆச்சரியத்துடன் செல்கின்றனர்.)

———

29. கடிதம்—I

(பெரியோர்களுக்கு)

க்ஷேமம். 17, சித்திரை வீதி, மதுரை,
விபவஞூ ஆனிமீ 17வ.

தேவரீர் மாமா அவர்களுக்குத் தங்கள் அன்புள்ள நடராஜன் அநேக நமஸ்காரம். இங்கு, யாவரும் சுகமே. அவ்விடத்திய க்ஷேமத்தைத் தெரிவிக்க வேண்டும்.

நான் மேல் வகுப்புக்கு மாற்றப்பட்டு இப்பொழுது மூன்றும் வகுப்பில் வாசிக்கிறேன். புதிய புத்தகங்கள் வாங்கிவிட்டேன். உபாத்தியாயர் அன்போடு பாடங்களைக் கற்பிக்கிருர். அங்கு கோபாலன் சரிவரப் படிக்கின்ருஞ?

வருகிற ஆடி மாதத்தில் இங்குள்ள கோயிலில் ஊஞ்சல் திருநாள் நடக்கப் போகிறது. அதைப் பார்க்கத் தாங்கள், மாமி, கோபாலன், குழந்தைகள் இவர்களுடன் வர வேண்டுகின்றேன்.

அங்கே கிராமத்தில் மழை உண்டா? பயிர் பச்சைகள் செழிப்பாக இருக்கின்றனவா? விவரமான மறுமொழி எழுதக் கோருகின்றேன்.

என் நமஸ்காரத்தை அங்கு யாவருக்கும் தயை செய்து சொல்லவும்.

தங்கள் அன்புக்குரிய,
நடராஜன்.

(விலாசம்.)

மகா-ள-ள-ஸ்ரீ சுந்தர முதலியார் அவர்கள்,
கடம்பனூர் கிராமம்,
சைதாப்பேட்டை போஸ்டு.

30. கடிதம்—II

(இளையோர்களுக்கு)

கடம்பனூர்,

க்ஷேமம். சைதாப்பேட்டை போஸ்டு,

விபவஞு ஆனிமீ 25உ.

சிரஞ்சீவி நடராஜனுக்கு அநேக ஆசீர்வாதம். இவ்விடம் க்ஷேமம்; அவ்விடத்திய நலத்தை அறிய மிகவும் ஆசை.

உன்னுடைய அன்பு மிகுந்த கடிதம் வந்தது. நீ நன்ருகப் படித்து வருவதை அறிந்து மிகச் சந்தோஷிக்கிறேன். உனது பாட்டியார் முதலானவர்கள் உன்னைப் பார்க்க ஆசைப்படுகிருர்கள். திருவிழாவுக்கு நாங்கள் எல்லோரும் அங்கு வருகின்ருேம். உன் தாய் தந்தையர்களுக்கு இதைச் சொல்லவும்.

இவ்வருஷத்தில் இங்கு நல்ல மழையே. ஏரி குளங்களில் தண்ணீர் நிரம்ப இருக்கிறது. சென்ற புதன்கிழமை நமது பசு லக்ஷ்மி, சேங்கன்று போட்டது. மான் குட்டிபோல் கன்று துள்ளித் துள்ளிக் குதிப்பதை நீ பார்த்தால் மிகவும் சந்தோஷப்படுவாய். மற்றவை நேரில்.

உனது அன்புள்ள,

சுந்தர முதலியார்.

(விலாசம்.)

சிரஞ்சீவி நடராஜன்,

17, சித்திரை வீதி,

மதுரை.

31. என் தோட்டம்

நலமான தோட்டமிது
நான் போட்ட தோட்டமிது.
நலமான மரங்களதில்
நாற்புறமும் நட்டுவைத்தேன்.
பலமான மாங்கொட்டை
மண்ணினுள்ளே புதைத்தேனே.
பலவகையாம் விதை தேடிப்
பாத்தி கட்டி விதைத்தேனே.
மூலையிலே மல்லிமலர்
முகம்பார்த்துச் சிரித்திடுவாள்.
காலையிலே ரோஜாப்பூ
கண் திறந்து பார்த்திடுவாள்.
மாலையிலே மந்தாரை
மனமகிழ மலர்ந்திடுவாள்.
மாலை கட்ட மனமில்லை;
மலரழகைப் பார்த்திருப்பேன்.
மலர்களெல்லாம் ஒன்று கூடி
மலர்மாயைத் திறந்தெனக்கே
பலவகையாம் நற்கதைகள்
பாட்டாகப் பாடிடுமே.
மலர்மல்லி மணம்போலப்
பலரோடும் நானிருப்பேன்.
பலர்முன்னே மணரோஜா
முகம்போலே மலர்ந்திருப்பேன்.

32. சித்திர இலக்கணம்

எழுவாய்



உழுகிறான்.

ஓடுகிறாள்.

வருகிறார்.

ஓடுகிறார்கள்.



மேய்கிறது.

மேய்கின்றன.

யார் உழுகிறான்?

யார் ஓடுகிறாள்?

யார் வருகிறார்?

எவர்கள் ஓடுகிறார்கள்?

எது மேய்கிறது?

எவை மேய்கின்றன?



செய்கிறவர்கள்.	செய்கிற காரியம்.
எழுவாய்	பயநிலை
உழவன்	உழுகிருன்.
பெண்	ஓடுகிருள்.
இராஜா	வருகிருர்.
ஜனங்கள்	ஓடுகிருர்கள்.
பசு	மேய்கிறது.
மாடுகள்	மேய்கின்றன.

கீழே உள்ள எழுவாய்களுக்குப் பயநிலை கூட்டி வாசி:—

காரியம் செய்கிறவர்கள்.	செய்கிற காரியம்.
எழுவாய்	பயநிலை
வேலைக்காரன் வேலை	———
அக்காள் பாடம்	———
உபாத்தியாயர் பாடம்	———
பையன்கள் பந்து	———
பூனை எலியை	———
பட்சிகள் உயரப்	———

33. ஔவை உபதேசம்—III

கொன்றை வேந்தன்

1. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.
2. ஆலயம் தொழுவது சாலவும் நன்று.
3. ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்.
4. எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்.
5. ஔவியம் பேசுதல் ஆக்கத்திற்கு அழிவு.
6. கீழோர் ஆயினும் தாழ உரை.
7. கைப்பொருள் தன்னின் மெய்ப் பொருள் [கல்வி.
8. சூதும் வாதும் வேதனை செய்யும்.
9. சோம்பர் என்பர் தேம்பித் திரிவர்.
10. தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை.
11. தாய் சொல் துறந்தால் வாசகம் இல்லை.
12. திரைகடல் ஓடியும் திரவியம் தேடு.
13. தீராக் கோபம் போராய் முடியும்.
14. தோழனோடாயினும் ஏழமை பேசேல்.
15. நல்லிணக்கம் அல்லது அல்லல் படுத்தும்.
16. நுண்ணிய கருமமும் எண்ணித் துணி.
17. பாலொடு ஆயினும் காலம் அறிந்து உண்.
18. புலையும் கொலையும் களவும் தவிர்.
19. பொல்லாங்கு என்பது எல்லாம் தவிர்.
20. வேந்தன் சீறின் ஆம்துணை இல்லை.

அர்த்தம் :—சாலவும்=மிகவும். பகைக்கின்=விரோதித்தால். வேருடன்=வேர்போலும் பரவியுள்ள சுற்றத்தாருடன். எண்ணும்=கணிதநூலும் (கணக்கும்). எழுத்தும்=இலக்கணமும், ஔவியம்=பொருமையான வார்த்தைகள். ஆக்கம்=செல்வம். அழிவு=கேடு. தாழ=பணிவாக. உரை=சொல். கைப்பொருள் தன்னின்=கையிலுள்ள பொருளைக் காட்டிலும். வாது=தர்க்கம் பேசுதல். சோம்பர்=சோம்பலை உடையவர். துறந்தால்=வெறுத்தால். வாசகம்=நல்ல உபதேசச் சொல். திரைகடல்=அலையுள்ள சமுத்திரம். திரவியம்=பொருள். போர்=சண்டை. தோழன்=சிநேகன். ஏழ்மை=வறுமையால் உண்டான சிறுமை. நல்லிணக்கம்=நல்ல சகவாசம். அல்லல்=துன்பம். நுண்ணிய=சிறிய. கருமம்=வேலை. புலை=மாமிசம் முதலியன உண்ணுதல். கொலை=கொல்லுதல். களவு=திருடுதல். தவிர்=நீக்கு. பொல்லாங்கு=தீங்கு; குற்றம். வேந்தன்=அரசன். சீறின்=கோபித்தால்.

———

Printed at the Royal Printing Works, Mount Road, Madras.

கோகலே தமிழ் வாசகங்கள்

கோகலே தமிழ் வாசகம்	I—1-ம் வகுப்பிற்கு		0-2-0
ஷை	II—2-ம்	,,	0-3-0
ஷை	III—3-ம்	,,	0-4-0
ஷை	IV—4-ம்	,,	0-5-0
ஷை	V—5-ம்	,,	0-6-0
ஷை	VI—6-ம்	,,	0-7-0
ஷை	VII—7-ம்	,,	0-8-0
ஷை	VIII—8-ம்	,,	0-9-0

கோகலே 6, 7, 8-ம் வாசகங்களுக்குத்

துணைப்புத்தகங்கள் முறையே விலை அணு 4,5,6.

பாலர் தமிழ் வாசகங்கள்

பால சிக்ஷை	I—1-ம் வகுப்பிற்கு		0-2.0
பாலர் தமிழ் வாசகம்	II—2-ம்	,,	0-3-0
ஷை	III—3-ம்	,,	0-4-0
ஷை	IV—4-ம்	,,	0-5-0
ஷை	V—5-ம்	,,	0-6-0

செய்யுள் மலர்

உலகநீதி	மூலமும், உரையும்	0-0-9
ஆத்திசூடி	,,	0-1-3
கொன்றைவேந்தன்	,,	0-1-0
வெற்றிவேற்கை	,,	0-1-6
வாக்குண்டாம்	,,	0-1-6

Printed at the Royal Printing Works, Mount Road, Madras.